★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுன் 4 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 திනකරන්

வரு. 92 இல. 132 | Tuesday 04, June, 2024 | 16பக்கங்கள் | 50/-







### தோட்டத்தொழிலாளரின் 1,700 சம்பள அதிகரிப்புக்கு எதிராக

# தோட்டக் கம்பனிகள் கோரிய இடைக்காலத் தடை தள்ளுபடி



பெருந் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக நிர்ணயித்து தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்ப டுத்துவதை இடைநிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிப்பதில்லையென, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (03) தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய குழுவினால் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களால் இதற்கு முன்னர் வழங்கிய வழக்கு தீர்ப்புகள், முன்னுதாரணங்கள் மற்றும் அரசாங்க கொள்கை முன்னுதாரணங்களின் அடிப்படையில் இந்த சம்பள உயர்வு வழங்கப்படும் விடயங்களை கருத்திற்கொண்டு, இச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட மாட்டாதென நீதியரசர்கள் குறிப்பிட்டனர்.

இந்த மனு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சார்பில் விடயங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்காமல் மனுவை நிராகரிக்குமாறு நீதிமன்றில் கோரினார்.

நாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அமைச்சருக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார். இலங்கையில் பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருவதாகவும் அவர்களும் இலங்கை பிரஜைகள் எனவும் சட்டத்தரணி

06

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஜனாதிபதி சந்திப்பு



**கொலன்னாவ, களனி, அம்பத்தளை பகுதிகளில் வெள்ள பாதிப்பு நிலைமையை நேரில் கண்டறிந்தார்**

**அனர்த்த நிலைமை குறையும் வரை மக்களுக்கு நிவாரணம்**

களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும், மழை நீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் விதத்திலும் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணங்களுக்கு இடமளிக்க வேண்டாமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் நிலம் நிரப்பப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கும் முல்லேரியா மற்றும் IDH வைத்தியசாலைகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால்

06

# கடும் மழையுடனான காலநிலை: 16 பேர் உயிரிழப்பு, 05 பேர் மாயம்

## 21,353 குடும்பங்களை சேர்ந்த 84,749 பேர் பாதிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**நிவாரணங்களுக்காக அரசு ரூபா 122 மில். ஒதுக்கீடு**

நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால், 16 பேர், உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐவரும் மாத்தறை மாவட்டத்தில் நால்வரும் அவிசாவளை பிரதேசத்தில் மூவரும் மரணித்துள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், ஐவர் காணாமலாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மழை, வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இதுவரை 122 மில்லியன்

06

### நல்லை ஆதீனத்தில் ஐ.நா வதிவிட பிரதிநிதி வழிபாடு



யாழ். நகருக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ், அண்மையில் (02) நல்லை ஆதீனத்துக்குச் சென்று ஆதீன குரு முதல்வர் ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பரம்மாச்சார்ய சுவாமிகளை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் தலைவர் ரிஷி தொண்டுநாத சுவாமி ஆகியோரும் கலந்துகொண்டனர். (படம்: யாழ். விசேட நிருபர் மயூரன்)

# விற்றோ சமையல் எரிவாயு இன்று முதல் விலை குறைப்பு



லிற்றோ சமையல் எரிவாயு விலை குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், இந்த விலை குறைப்புசெய்யப்படவுள்ளது.

லிற்றோ சமையல் எரிவாயுவின் புதிய விலைகள் நேற்றுக் காலை அறிவிக்கப்படுமென லிற்றோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.




03 G.C.E.O/L விடைத்தாள்கள் மதிப்பீடு தினத்தில் மாற்றம்

08 வரை ஒத்திவைப்பு


# பாடசாலைகள் சிலவற்றுக்கு இன்றும் விடுமுறை




நாட்டில் தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக சப்ரகமுவ, தென் மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள சில பாடசாலைகளுக்கு இன்றும் (06) விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பாடசாலைகள் வழமை போன்று நடைபெறுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இன்று (04) பாடசாலைகள் நடைபெறாத மாகாணங்கள், மாவட்டங்கள் மற்றும் பிராந்தியங்கள் தொடர்பாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

06

# பல்கலைக்கழகத்துக்கு மாணவரை இணைக்கும் கையேடு வெளியீடு



பல்கலைக்கழக பிரவேசத்துக்கு தகுதியான மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான மாணவர் கையேடு, வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, க.பொ.த உயர் தர பரீட்சைக்கு தோற்றிய 2,69,613 பரீட்சார்த்திகளுள் 1,73,444 பரீட்சார்த்திகள் 2024 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக பிரவேசத்துக்கான அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்துள்ளனர்.

2023 (2024) க.பொ.த உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் (04) நடைபெற்றது. இதன் பெறுபேறுகள் கடந்த மாதம் 31இல், வெளியிடப்பட்டன. தகுதியான மாணவர்கள் பல்கலைக்கழக இணையத்தளமான

06

# அனர்த்தத்தால் முற்றாக சேதமடைந்த வீடுகள் 02 மாதங்களுக்குள் புனரமைப்பு

**ஜனாதிபதி ரணில் அறிவிப்பு**

அனர்த்தத்தினால் முற்றாக சேதமடைந்த வீடுகள் அனைத்தும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அரச நிதியில் நிர்மாணிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அதற்கு முப்படைகள் மற்றும் பொலிஸாரின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்படும் என சுட்டிக்காட்டிய அவர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலகப் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் இது தொடர்பான முழுமையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி

06




03 ஸ்ரீலசுக தலைவராக செயற்படல்

அமைச்சர் விஜேயதாசவுக்கு எதிரான தடை மீண்டும் நீடிப்பு


# IMF கடன் ஒத்துழைப்பு: 02ஆவது மீளாய்வு கூட்டம் 12 இல் ஆரம்பம்



இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள கடன் ஒத்துழைப்பு தொடர்பான இரண்டாவது மீளாய்வுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலில் இதற்கான மீளாய்வு திகதி உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி மீளாய்வின் போது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அந்த நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். பொருளாதார ஸ்திரத்தன்மையை முன்னெடுப்பதற்காக மூன்றாவது தவணை நிதியை பெற்றுக் கொடுப்பது தொடர்பில், இதன் போது கவனம் செலுத்தப்படுவதுடன் சகல நாடுகளினதும் ஏகமனதான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டம் முடிவடைவதற்கு முன்பதாக, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பரிஸ் கிளப்பின் உத்தியோகபூர்வ கடன் தெரிவுக் குழு மற்றும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் புரிந்துணர்வு

06



இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரான மிலிந்த மொரகொட தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் நூறு வாரங்களாக தொடராக எழுதி வந்த "மலரும் யுகத்துக்கு புதியதோர் வடிவம்" எனும் தொடர், நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழா, கடந்த சனிக்கிழமை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. வீரகேசரி பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளர் குமார் நடேசன் சிறப்பு பிரதியை, மிலிந்த மொரகொடவிடமிருந்து பெற்றுக் கொண்ட போது எடுத்த படம். (படம்: தெஹிவளை கல்கிஸ்ச விசேட நிருபர்)




03 போலி இந்திய கடவுச்சீட்டுகள் தயாரித்த இலங்கையர் கைது


# இந்திய பாராளுமன்ற தேர்தல் முடிவு இன்று வெளியாகிறது



இந்தியாவின் 18 ஆவது பாராளுமன்றத் தேர்தலில் 543 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு 07 கட்டங்களாக நடைபெற்று முடிவுற்றுள்ளது. இந்நிலையில், இன்று காலை 08 மணிக்கு வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகியுள்ளது. இன்றைய தினமே தேர்தல் முடிவு அறிவிக்கப்படவுள்ளது .

உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான இந்திய பாரளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 19இல், தொடங்கி ஜூன் 01 வரை 07 கட்டங்களாக நடைபெற்று முடிந்துள்ளது.

06

### அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டோர்

# மறு அறிவித்தல் வரை சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டாம்

**தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மண் சரிவு அனர்த்த பகுதிகளிலிருந்து பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோர், மறு அறிவித்தல் வரை சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், சம்பந்தப்பட்ட மக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் 350 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி இடம் பெற்று வருவதால்,

06

# நகர்வலம்



## களுத்துறை நகர சபைத் தலைவர் ஐ.தே.கட்சி அமைப்பாளராக நியமனம்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மற்றும் பேருவளை நகர சபை பிரிவுகளின் அமைப்பாளராக களுத்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் ஆமிர் நஸீர் நியமனம் பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆமிர் நஸீருக்கான நியமனக் கடிதத்தை கையளித்தார்.

## போதைப் பொருள் மதுவிலக்கு தொடர்பில் அநுராதபுர சமுர்த்தி அதிகாரிகளுக்கு பயிற்சி

**திறப்பனை தினகரன் நிருபர்**

மது மற்றும் போதை ஒழிப்பு தொடர்பான பயிற்சி செயலமர்வொன்று (27) அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இதன் போது மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ.வ சந்தவின் ஆலோசனையின் பேரில் மாவட்ட சமுர்த்தி பிரிவினரால் சகல பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் 50 க்கும் மேற்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். இங்கு போதைப்பொருள் தடுப்புக்கான புதிய அணுகுமுறைகள் பற்றி தெளிவு படுத்தப்பட்டன.

நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் போதைப் பொருள் ஒழிப்பில் அநுராதபுரம் மாவட்டம் கணிசமான மட்டத்தில் இருப்பதாகவும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு இளைஞர் சமூகமே அதிகளவில் அடிமையாகியுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட போதைப் பொருள் தடுப்பு வேலைத்திட்டமும் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அநுராதபுரம் மாவட்ட வேலைத்திட்ட இணைப்பாளர் திருமதி அமலி எதிரிசிங்க இங்கு தெரிவித்ததாவது, இந்த போதைப் பொருள் பாவனையினால் பெரும்பாலான சமூகப் பிரச்சினைகள் உண்டாகின்றன. அதே நேரத்தில், பாலியல் லஞ்சம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் சேஷ்டை போன்ற பிரச்சினைகள் எழுகின்றன,

இந்த நிலைமைகளுக்கு எதிராக முன்னோடித் திட்டமாக, நச்சாதுவ மற்றும் மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 12 கிராமங்களில் இந்த விழிப்புணர்வு நிகழ்வுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மகிழ்ச்சியான குடும்பம், சிறுவர் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் மதுபானம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு போன்ற வேலைத் திட்டங்கள் இப்பிரதேசங்களில் அமுல் படுத்தப்படுவதாகவும், அநுராதபுரம் மாவட்டம் முழுவதும் இத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## வடமேல் மாகாண முகாமைத்துவ சேவையில் பதவி உயர்வு பெற்றோருக்கு நியமனம் வழங்கல்





வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சிரேஷ்ட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்கள், நேற்று (03) காலை வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட்டினால் வழங்கி வைக்கப்பட்டன.

வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் கடமையாற்றியோர் மத்தியில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சிரேஷ்ட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இதன் போது ஆளுனரினால் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போதுகருத்துவெளியிட்டவடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட்,

சகல துறைகளிலும் வடமேல் மாகாணத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை எதிர்பார்க்கின்றேன். நாட்டுக்கும் மாகாண மக்களுக்கும் குறிப்பிடத்தக்க வகையில் சேவையாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். வடமேல் மாகாணத்தின் நிர்வாக சேவை உள்ளிட்ட அனைத்து அரச துறைகளையும் சீரான முறையில் நடத்திச்செல்ல விசேட கவனத்தைச்செலுத்தியுள்ளேன். வடமேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், மாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி தீபிகா குணரத்தின, ஆளுனரின் செயலாளர் எம்.ஐ. இலங்கக்கோன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பண்ணிசை பயிற்சிநெறியினைப் பூர்த்தி செய்த ஆரியபட்டர் பால மந்திர் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர்



கொழும்பு மாவட்டம் ஆரியபட்டர் பால மந்திர் அறநெறி பாடசாலையின் தலைமை ஆசிரியர் (அதிபர்) திருமதி காந்திமதி செல்வராஜ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்துசமய கலாசார அலுவல்கள் கற்கைகள் நிறுவகமும் இணைந்து நடாத்திய திருமுறையினை முறைப்படி பாடும் ஆற்றலை வலுப்படுத்தும் இரண்டு ஆண்டு பண்ணிசை பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து திறமை சித்தி பெற்றுள்ளார். இவருக்கான சான்றிதழ் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## ஐக்கிய நூற்றாண்டு முன்னணி இளைஞர் மாநாடு





இலங்கை அரசியலில் வரலாற்றுச் சிறப்புமிக்க நாளைக் குறிக்கும் வகையில் ஐக்கிய நூற்றாண்டு முன்னணி இளைஞர் மாநாடு கடந்த ஜூன் 01ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறந்த பேச்சாளர்கள், சிறந்த தொழில் முனைவோர் யோசனைகளை உடையவர்கள் மற்றும் சிறந்த கோடிங் நபருக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. இலங்கையில் அரசியலில் ஈடுபடாமல் சிவில் சேவையில் ஈடுபடும் ஒரே தேச சேவை கட்சி என்ற வகையில், இந்த போட்டியில் கலந்து கொண்ட அனைத்து இளைஞர்களுக்கும் ஐக்கிய நூற்றாண்டு முன்னணி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

### சீரற்ற காலநிலையினால்

## களுத்துறை மாவட்டத்தில் பதினைந்து வீதிகள் தற்காலிகமாக மூடல்

**பாணந்துறை மத்திய மத்திய குறூப் நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகளில் நேற்று (3) முதல் பதினைந்து பிரதான மற்றும் இடைப் பாதைகளில் போக்குவரத்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதன் பிரகாரம் புளத்சிங்கள, மதுகம, வில்லாளி, பாலிந்தநுவர, இங்கிரிய, மதுராவல, பண்டாரகம, மில்லனிய மற்றும் அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் பல்வேறு வீதிகள் போக்குவரத்துக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மேலும் இரத்தினபுரிஇங்கிரிய வீதி, புளத்சிங்கள மோல்காவ மற்றும் புளத்சிங்கள இஹல வெல்கம வீதி, வரகாகொட கலவெல்லாவ வீதி, மதுகம ஹொரண 458 பஸ் வீதி உள்ளிட்ட பல வீதிகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவி பணிப்பாளர் எம்.பீ.ஆர்.பீ.எஸ். பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

## மாமாவை கொலை செய்த மருமகன்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மாதம்பை, செம்புகட்டிய பிரதேசத்தில் மருமகன் ஒருவர் அவரது மாமாவை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நரசிம்ம கேசர பண்டாரநாயக்க சாம்சன் ஜயவீர என்ற 56 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரியின் மகனே இந்த கொலையை செய்துள்ளதாகவும், சந்தேக நபரும் இறந்தவரின் வீட்டிற்கு அருகில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பழைய தகராறு காரணமாக உயிரிழந்தவருக்கும் சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் சந்தேக நபர் வாளால் வெட்டி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உடப்பூர் இந்து நெறிக்கழக கலைவிழா





உடப்பூர் இந்து நெறிக்கழகம் ஏற்பாடு செய்த வருடாந்த கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை(2) இடம்பெற்றது. இதன் போது, இந்து நெறிக்கழகத் தலைவர் பா.முருகானந்தன் தலைமையில் இடம்பெற்ற இதில், அறநெறியில் ,பல்வேறு போட்டிகளில் பங்காற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசல்களும் வழங்கப்பட்டன. இதில் இந்து மதகுரு, ஆகமசீலன், இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.சின்னராசாவும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.







கொழும்பு பிரேதேச செயலகத்தின் கீழ் இயங்கும் H.S இளைஞர் கழக மற்றும் விளையாட்டு கழகம் இணைந்து நடாத்திய H.S சித்திரை புத்தாண்டு விழா 2024ம் ஆண்டு அண்மையில் A.E. குணசிங்க விதியாலயத்தில் இடம் பெற்றது. இவ் விழாவில் கொச்சிக்கடை தெற்கு கிராம உத்தியோகஸ்தர் . லக்ஷனா சதுரங்கவும் கொழும்பு பிரேதேச இளைஞர் உத்தியோகஸ்தர் காமினி அலங்காரவும் கொழும்பு பிரேதேச சமூக சேவை ஒழுங்கமைப்பாளர் திருமதி பி. நிசாந்தியும் கொழும்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் என். சாயித்தும் H.S கழகத்தின் தலைவி செல்வி . உ. தர்ஷிகாவும் H.S கழக உறுப்பினர்கள் ஏனைய கழக உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். H.S சித்திரைப் புத்தாண்டு ஆண் அழகனாக செலவன் பவீஷனும் பெண் அழகியாக செல்வி கயலும் வெற்றியாளர்களாக இடம்பிடித்தனர். இவ் விழா H.S கழக தலைவி செல்வி. தர்ஷிகா தலைமையில் இடம் பெற்றது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 4 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
சுபஹ் - 04.32
ளுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 22
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி விஜயம்




நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு மக்களுடன் உரையாடிய ஜனாதிபதி மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# உலக சுற்றாடல் தின நிதி: பாதிப்புற்ற மக்களுக்கு வழங்க ஜனாதிபதி பணிப்பு

உலக சுற்றாடல் தினத்தின் தேசிய கொண்டாட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை, சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தின் தேசிய கொண்டாட்ட நிகழ்வை நாளை (05) கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியையே பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மக்கள் சிரமங்களை எதிர்நோக்கும் இந்த வேளையில், சிலர் விமர்சனங்களை முன்வைத்து அரசியல் ஆதாயங்களைப் பெற்றுக் கொள்ளமுயற்சிப்பதாகசுட்டிக் காட்டிய அவர், பாதிக்கப்பட்ட மக்களை அந்நிலையிலிருந்து மீட்பதே இத்தருணத்தில் அவசியம் எனவும் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர,

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அரசாங்கம் என்ற வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க ஆரம்பித்துள்ளோம். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள நிலைமை சீரானவுடன் அந்த பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயமும் உள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளோம். மேலும் சேதமடைந்துள்ள பாலங்கள், வடிகான்கள், வீதிகள் ஆகியவற்றைப் புனரமைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் நலனுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளன. இந்த நடவடிக்கையில் பணத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் தேவையான பணிகளை செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆனால், இந்த நேரத்தில் சிலர் விமர்சனங்களை மாத்திரம் முன் வைத்து அரசியல் ஆதாயம்

06

தினகரன்
THINAKARAN

## 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 04 ஜூன் 1932



### காலி கொலை வழக்கு

குற்றவாளி அழகக்கோனுக்கு மரண தண்டனை

### ஜூரிமாரின் ஏக அபிப்பிராயம்

**கோர்ட்டில் திரளான ஜனக் கூட்டம்**

லாரி அழகக்கோன், தனது பெற்றோரைக் கொலை புரிந்தான் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட விசாரணை இன்று முற்றுப்பெற்றது. எதிரியே இக்கொலைக்குக் காரணமென ஜூரிமார் ஏக மனதான தீர்ப்புக் கூற, நீதிபதி அவனுக்கு மரண தண்டனை விதித்தார். அங்கு கூடியிருந்த சுமார் 5000 ஜனங்களும் "சாது" என்ற சத்தத்துடன் தீர்ப்பை ஏற்றனர்.

நீதிபதி எதிரிக்கு மரண தண்டனை விதிக்கு முன் "ஏதும் கூற வேண்டியதிருக்கிறதா" என குற்றவாளியைக் கேட்டபோது "நான் குற்றமெதுவும் செய்யாதவன், இத்தகைய கொடுஞ் செய்கையை ஓர் மைந்தன் செய்வானா?" எனத் தெரிவித்தான்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# கெஹெலிய உள்ளிட்ட 8 பேருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிப்பு

**04ஆவது சந்தேக நபருக்கு பிணை**

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேரை ஜூன் மாதம் (14) வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று (03) உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (03) ஆஜர்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கின் 04 ஆவது சந்தேக நபர் 05 இலட்சம் ரூபா இரண்டு சரீர பிணைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# சட்டவிரோதமாக படகு மூலம் தலைமன்னார் வந்த ஐவர் கைது

(மன்னார் குறூப் நிருபர்)

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக படகு மூலம் தலைமன்னார் ஊர்மனை பகுதிக்கு வந்த இலங்கையர் ஐவர் கைதாகினர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள்,விசாரணைக்கு உடபடுத்தப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுப்பாடு, தலைமன்னார், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த 37,39,24,26 மற்றும் 38 வயதுடைய ஆண்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இவர்கள் ஐவரும் சில வருடங்களுக்கு முன்னர், இலங்கையிலிருந்து இந்தியா சென்று, பல்வேறு இடங்களில் வசித்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஐவரும் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**வெள்ளம், அனர்த்தங்களால் பாதிப்பு:**

# அவிசாவளை, புவக்பிட்டியவுக்கு பிரதமர் தினேஷ் நேரில் விஜயம்



கனமழை காரணமாக வெள்ளம் மற்றும் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளை பிரதமர் நேற்று (03) பார்வையிட்டார்.

இவற்றில், பாரிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அவிசாவளை, புவக்பிட்டிய உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களுக்கும் பிரதமர் விஜயம் செய்தார்.பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த பிரதமர் அவர்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடினார். பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்த்தன மற்றும் அரச அதிகாரிகள் சிலரும் இவ்விஜயத்தில் கலந்து கொண்டனர்.

# G.C.E O/L விடைத்தாள்கள் மதிப்பீடு தினத்தில் மாற்றம்

**08 வரை ஒத்திவைப்பு**

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக க.பொ.த.சா. தரப்பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிகள் பிற்போடப்பட்டுள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுக்கு வருகை தரவுள்ள பரீட்சகர்களுக்கு ஏற்படும் சிரமத்தை கருத்திற்கொண்டு, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க 06 இல் ஆரம்பிக்கப்படவிருந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2023 (2024) இன் முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டை எதிர்வரும் 08 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகள் எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 101 மதிப்பீட்டு நிலையங்களில் நடத்தப்படும். பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம். சீ. அமித் ஜயசுந்தர இதைத் தெரிவித்துள்ளார்.




# கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

**அமைச்சர் டக்ளஸ் கடிதம் கையளிப்பு**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக, முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகித்த துஷார லொக்கு குமார (30) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவருக்கு இந்நியமனத்தை வழங்கினார்.

இதற்கு முன்னர் நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த இவர், பல்வேறு அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்ததுடன் அந் நிறுவனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நீண்ட காலம் பதவி வகித்துள்ளார்.

கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டி.வி. உப்புல் அண்மையில் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இப்பதவியில் இவர், நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைகழகப் பட்டதாரியாவார்.

# 50 கிலோ சீமெந்து மூடை 150 ரூபாவினால் குறைப்பு

சீமெந்து மூடையின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சீமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந்த விலை குறைப்பு இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும், இதற்கமைவாக 50 கிலோ மூடை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை, 2.250 ரூபாவாகும் எனவும் சீமெந்து நிறுவனங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# போலி இந்திய கடவுச்சீட்டுகள் தயாரித்த இலங்கையர் கைது

இந்திய கடவுச்சீட்டுகளை சட்ட விரோதமான முறையில் தயாரித்த இரண்டு இலங்கையர் உட்பட மூவரை, இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்காக இவர்கள் போலியாக இந்திய கடவுச்சீட்டுகளை தயாரித்துள்ளனர். தமிழகத்தில் இவர்களை கைது செய்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கைதானவர்களுடன் இந்திய பெண்ணும் கைது செய்யப்பட்டார். இவர் கடவுச்சீட்டுகளை வழங்கியவர் என சந்தேகிக்கப்படுகிறது.



21 இலங்கையருக்கு இவ்வாறு இவர்கள் போலி இந்திய கடவுச்சீட்டுகளை தயாரித்துள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த மோசடிகள் குறித்து அறிந்துகொண்ட இந்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஜனவரி மாதம் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. இதுவரை கைதான 26 பேரில்,மூன்று இலங்கையர் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**ஸ்ரீலசுக தலைவராக செயற்படல்**

# அமைச்சர் விஜேயதாசவுக்கு எதிரான தடை மீண்டும் நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ செயற்படுவதைத் தடுப்பதற்காக விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (3) இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.



விஜேயதாச ராஜபக்ஷக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை நேற்று (03) விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. இதன்போது, இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் வழங்குமாறு, பிரதிவாதி தரப்பின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, இவ்வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டது.மேலும், இந்த வழக்கை எதிர்வரும் (14 ) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# பெண்கள் வலுவூட்டல் சட்டமூலத்துக்கு துறைசார் மேற்பார்வைக் குழு அனுமதி

**பாராளுமன்றில் இன்று முன்வைக்கப்படும்**

பாராளுமன்றத்தில் இரண்டாவது மதிப்பீட்டுக்காக இன்று (04) முன்வைக்கப்பட உள்ள பெண்களின் வலுவூட்டல் சட்டமூலத்துக்கு சிறுவர், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தலைமையில் அண்மையில் (27) கூடிய சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டத்திலேயே, நிபந்தனையின் அடிப்படையில் இச்சட்டமூலத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.


இக்கூட்டத்தில் பாராளுமன்ற பெண் பிரதிநிதிகளின் ஒன்றியத்தின் தலைவர் வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, ஒன்றியத்தின் இணைத்தலைவர் வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல,மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய, டீ.வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

06

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 26

## குறள் தரும் சிந்தனை



பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

செல்வத்தைச் சேர்த்துவைத்து அதனை இழக்கும்போது, விருந்தோம்பல் எனும் வேள்விக்கு அது பயன்படுத்தப்படாமற் போயிற்றே என வருந்துவார்கள்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் அரசு அக்கறை

நாட்டில் கடந்த சில தினங்களாக சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. அதிலும் கடந்த வார இறுதியில் கடும் மழையுடன் கூடிய காலநிலையை நாடு எதிர்கொண்டது. அதன் விளைவாக களனி கங்கை, களுகங்கை, ஜின்கங்கை, அத்தனகலு ஓயா உள்ளிட்ட சில கங்கைககளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

அதேநேரம் சில நீர்த்தேக்கங்களது நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. அத்தோடு இச்சீரற்ற காலநிலையினால் நாட்டின் மலையகத்திலும் மலைசார்ந்த பல மாவட்டங்களிலும் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டுள்ளன. இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளநிலையும் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக தெற்குக்கான அதிவேக நெடுஞ்சாலையின் வெலிப்பன்ன நுழைவாயில் மறுஅறிவித்தல் மூடப்பட்டதோடு கடுவெல நுழைவாயிலும் மூடப்பட்டது.

இந்த கடும் மழைவீழ்ச்சி காரணமாக களனி கங்கை, களுகங்கை, ஜின் கங்கை என்பவற்றின் இரு மருங்கிலுமுள்ள தாழ்நிலப் பிரதேசங்களிலும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணியில் முப்படையினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் நிமித்தம் அவர்களது படகுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில பிரதேசங்களில் விமானப்படையினரின் ஹெலிகொப்டர்களும் மீட்பு பணிக்கு பாவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக காலி மாவட்டத்திலுள்ள நெலுவ பிரதேசம் தற்போதைய சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக உள்ளது. அங்கு பெல் 41 2 ஹெலிகொப்டரும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக இச்சீரற்ற காலநிலையினால் மக்க ளின் இயல்பு வாழ்வும் பல பிரதேசங்களில் போக்குவரத்து சேவைகளும் பாதிப்படைந்துள்ளன.

இச்சீரற்ற காலநிலை விளைவாக நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது. இன்று சில மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு இருக்கின்றது.

வார இறுதியில் நாட்டில் நிலவிய கடும் மழையுடன் கூடிய காலநிலையின் விளைவாக 12 பேர் மரணமடைந்துள்ளனர். 05 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் இருவரது பிரேதங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்து இருக்கிறது.

இவை இவ்வாறிருக்க, இச்சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் 23 ஆயிரத்து 753 குடும்பங்களைச் சேர்நத 87 ஆயிரத்து 379 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2,313 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 706 பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறி 119 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு உடனடி நிவாரணப்பணிகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவென 122 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவினால் நாட்டில் 977 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, 09 வீடுகள் முழுமையாக அழிவுற்றும் உள்ளன. அந்த வீடுகள் அனைத்தையும் அரசாங்க செலவில் நிர்மாணித்து கொடுப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் எதிர்வரும் இரு மாதங்களுக்குள் இவ்வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பான முழுமையான வேலைத்திட்டமொன்று ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஜனாதிபதி நேற்று நேரில் விஜயம் செய்து பார்வையிட்டதோடு, மக்களுடனும் அளவளாவியுள்ளார். அத்தோடு மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களையும் அவர் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

தற்போதைய சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். அந்த வகையில் இவ்வேலைத்திட்டங்களை மக்கள் பெரிதும் வரவேற்று பாராட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்திய மக்களவை தேர்தல் முடிவு இன்று அறிவிப்பு





## புதிய அரசாங்கத்தை அமைக்கப் போவது யார்?

இந்தியாவின் 18 ஆவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் 543 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு 7 கட்டங்களாக நடைபெற்று முடிவுற்ற நிலையில், ஜூன் 4ஆம் திகதியான இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுகின்றது. இன்றைய தினமே தேர்தல் முடிவு அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல் முடிவை இன்று அறிவிக்க இந்திய தேர்தல் ஆணையம் தயாராகி வருகின்றது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தொடங்கி ஜூன் 1 வரை 7 கட்டங்களாக நடைபெற்று முடிந்துள்ளது. 543 தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

வாக்குப்பதிவுக்கு பின்னர் அனைத்து வாக்குச்சாவடிகளிலிருந்தும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தபால் வாக்குப் பெட்டிகள் வாக்கு எண்ணிக்கை மையங்களில் சீல் வைக்கப்பட்ட அறைகளில் பாதுகாக்கப்படுகின்றன.

பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் வாக்கு எண்ணும் மையங்களுக்குள் வாக்கு எண்ணும் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் இன்று 4 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்குள் வந்து விட்டனர். இன்று பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வெளியே எடுக்கப்படுகின்றன. வாக்குப் பெட்டிகளில் இருக்கும் சீல்கள் அகற்றப்பட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஒட்டப்பட்டிருக்கும் விபர காகிதங்கள் சரியாக உள்ளதா என்பது சரிபார்க்கப்படும். அந்தந்த தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரியாக இருப்பவர் (Returning Officer) வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையத்திற்கும் பொறுப்பாளராக இருப்பார்.

மேலும், வாக்கு எண்ணும் மையத்திற்குள் செல்ல அதிகாரிகள், அரசியல் கட்சி முகவர்கள், வேட்பாளர்கள் உள்ளிட்டோருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர், வாக்கு எண்ணும் உதவியாளர், நுண் பார்வையாளர்கள் ஆகியோர் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உள்ளே அனுமதிக்கப்படுவர்.

இன்று காலை 8 மணிக்கு முதலில் அஞ்சல் வாக்குகளை ஒரு மணி நேரத்தில் எண்ணி முடித்த பின்னர் முதலில் தபால் வாக்கு எண்ணிக்கை நிலைவரம் வெளியிடப்படும். தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கி 30 நிமிடங்களுக்கு பிறகு மின்னணு வாக்குப்பதிவு (EVM) பெட்டியில் வாக்குகளை எண்ணத் தொடங்கலாம் என முகவர்களுக்கு வழங்கப்பட்ட கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதி வாரியாக வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையின் சீல்கள் வேட்பாளர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு சென்று எண்ணப்படும்.அதன் பின்னர் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

மக்களவைத் தேர்தலில் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பான கருத்துக் கணிப்பு முடிவுகளின் எதிரொலியாக (பா.ஜ.க வெற்றி பெறுமென்று) இந்திய பங்குச் சந்தைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதே சமயம், டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 3 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்த்துள்ளது. டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 83.00 என்ற அளவில் உயர்ந்துள்ளது.

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 300 இடங்களுக்கு மேல் வென்றெடுக்கும் என்று பெரும்பாலான ஊடகங்கள் எதிர்வு கூறியுள்ளன. சாதகமான யூகங்கள் காரணமாக இந்திய பங்குச் சந்தைகளில் குறியீட்டு எண்கள் உயர்ந்துள்ளன.

இந்தியாவில் 64.2 கோடி வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர் உலகிலேயே அதிகப்படியான வாக்காளர்கள் வாக்களித்த தேர்தல் இதுவாகும். பெண்கள் மட்டுமே 31.2 கோடி பேர் வாக்களித்துள்ளனர்.

வாக்கு எண்ணும் பணிகளில் மட்டும் 38 ஆயிரத்து 500 பேர் ஈடுபட்டுள்ளனர். இதில் வாக்கு எண்ணும் பணியில் 10 ஆயிரம் பேரும், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்து வைக்கும் பணியில் 24 ஆயிரம் பேரும், நுண்பார்வையாளர்களாக 4 ஆயிரத்து 500 பேரும் ஈடுபடுகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் 39 வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள 43 கட்டடங்களில் வைக்கப்பட்டு உள்ளது.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் ஒவ்வொரு மேசையிலும் கமரா பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை கண்காணிக்கப்படும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் (ஐ.ஏ.எஸ்) முன்னிலையில் இந்த வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறும். ஒவ்வொரு சுற்று முடிவிலும் சுற்று வாரியாக எண்ணப்பட்ட வாக்குகள் அறிவிக்கப்படும்.

இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நிலையில்,நேற்று நண்பகலில் தேர்தல் ஆணையம் சார்பில் தலைமைத் தேர்தல் ஆணையர் செய்தியாளர்களை சந்தித்தார். தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகு தலைமை தேர்தல் ஆணையர் செய்தியாளர்களை சந்தித்தது இதுவே முதல் முறை ஆகும்.

# ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பண்டாரவளையில் கண்காட்சி

ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் விவசாய தொழில் நுட்ப கண்காட்சி பண்டாரவளை பிதுனுவெவ கல்விப் பயிற்சி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முறையான பயிற்சியின் ஊடாக விவசாய அபிவிருத்திக்கான தொலைநோக்குப் பார்வையின் கீழ், ஊவா மாகாணத்திற்கு உரிய தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் விவசாய அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்தி விவசாயத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவும், விவசாய தொழில் நுட்ப மற்றும் விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவுமே இக் கண்காட்சி இடம்பெற்றது.





இக்கண்காட்சி மைதானத்தில் பழ சாகுபடி, மலர் சாகுபடி, காய்கறி சாகுபடி, விதை நடுகை, இயற்கை உற்பத்தி, பாது காப்பான பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, தோட்டக் கலை, திசு நடுகை மற்றும் காளான் உற்பத்தி ஆய்வகம், உருளைக்கிழங்கு உற்பத்தி துறை, கோழி வளர்ப்பு, மண்வேதியியல் ஆகியவை பற்றிய அறிவு மற்றும் அணுகுமுறைகளை வழங்குவதற்காக பல கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விவசாய தொழில்நுட்பக் கண்காட்சியை பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன தெனிபிட்டிய மற்றும் ஊவா மாகாண பிரதம செயலாளர் திருமதி தமயந்தி பரணகம ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

ஊவா மாகாண விவசாயத்துறை செயலாளர் உபாலி ஜயசேகரவின் பணிப்புரையின் பேரில், மாகாண விவசாய பணிப்பாளர் ஈ.வி.கே.பி.ஜெயலத் உள்ளிட்ட அதிகாரிகள் விவசாய தொழில் நுட்ப கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

எம்.ஏ.எம்.ஹசனார்...
(ஊவா சுழற்சி நிருபர்)

# பொருளாதாரத் திட்டமிடலில் பேரறிவு கொண்டவர் கலாநிதி இ.மகாலிங்கசிவம்

கனடாவில் தான் கலாநிதிப் பட்டத்திற்காகப் பயிலும் போதுதான், 'இலங்கையில் நாங்கள் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட அறிவு உலகின் எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் குறைந்தது அல்ல என்று உணர்ந்தேன்' என்று மகாலிங்கசிவம் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறியிருக்கிறார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சி.ஜே. எலியேசர், பேராசிரியர் நடராசர் ஆகிய இரு பெரும் கணித மேதைகளிடம் கணிதவியல் பயின்ற பெரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத் திட்டமிடலில் கால் நூற்றாண்டு காலம் அரும் பெரும் சேவையாற்றிய கலாநிதி இ.மகாலிங்கசிவம், என் அறிவுக்கெட்டிய வரையில் இலங்கையின் முதல் கணிதப்பொருளியல் அறிஞர் ஆவார்.

1951 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, கணிதவியலில் 1955 இல் சிறப்புப் பட்டம் பெற்றவர். 1965 இல் பொதுநலவாய நாடுகளுக்கான புலமைப் பரிசில் பெற்று, கனடாவில் றொறன்ரோ பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைச் சிறப்புறச் செய்ததன் அடிப்படையில் கலாநிதிப் பட்ட ஆய்வினைத் தொடர அனுமதிக்கப்பட்டார்.

'கனடாவின் சுத்திகரிக்கப்பட்ட செம்புக் கனிமத்திற்கான சந்தை: ஒரு கணிதப் பொருளியல் ஆய்வு' (Market for Canadian Refined Copper: An Econometric Study) என்ற ஆய்வேட்டிற்காக மகாலிங்கசிவம் 1969 இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

இலங்கையின் புகழ்மிகு பொருளியல் அறிஞர் காமினி கொரியா, லால் ஜெயவர்த்தன ஆகியோருடன் பொருளாதாரத் திட்டமிடலில் இணைந்து பணியாற்றியவர் மகாலிங்கசிவம்.



பொருளாதாரத் திட்டமிடலில் அவரின் அனுபவம் விசாலமானது. திட்டமிடலின் அனைத்து அம்சங்களிலும் அவர் பூரண அறிவு பெற்றிருந்தார். மாகாண சபைகள் உருவாகி , அவற்றின் முக்கிய அங்கமாக நிதிக்குழு அமைக்கப்பட்டபோது, அதன் முக்கிய நிர்வகியாக மகாலிங்கசிவம் நியமிக்கப்பட்டார். அதிகாரம் மையத்தில் குவிவதால் ஏற்படும் பாதக விளைவுகள், கிராமிய மட்டத்தில் அதிகாரம் பகிரப்படுவதன் அவசியம், நிதிப்பங்கீடு நியாயமாக அமைதல் என்பன பற்றி அவர் அதிக கவனம் செலுத்தினார். மகாலிங்கசிவமும் கலாநிதி வி.அம்பலவாணரும் திட்டமிடல் சேவையினை மிக உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுத்திருந்தனர். காமனி கொரியா இலங்கையின் பத்தாண்டுப் பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தபோது, இந்தியத் திட்டமிடலின் தந்தை எனப்படும் பேராசிரியர் மகலநோபிஸ் என்னும் கணிதப் பொருளியலாளரின் ஆலோசனையை நாடியிருந்தார்.

மகாலிங்கசிவம் அவர்கள் இந்தப் பத்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தபோது அவருக்கு முதலில் தோன்றியது இந்தத் திட்டத்தில் எந்த கணிதப்பொருளாதார மாதிரியும் பாவிக்கப்படவில்லை என்பதாகும். இத்தகைய நீண்ட பொருளாதாரத் திட்டத்தில் ஒரு கணிதப் பொருளாதார மாதிரியின் பிரயோகம் மிக அவசியமானது என்றே அவர் கருதினார்.

பண்டகை, உடுப்பிட்டியில் இராசையா_ இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்த மகாலிங்கசிவத்தின் ஆரம்பக் கல்வி திருகோணமலையில் ஆரம்பமானது. அவரது தந்தை திருகோணமலையில் பணியாற்றியதையடுத்து, அவர் திருகோணமலையில் ஸ்ரீ சண்முகா வித்தியாலயம், இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்று, பின்னர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 1942 இல் சேர்ந்து எஸ்.எஸ். சி.வரை பயின்று திறமைச் சித்தி பெற்றார். கே.டி.ஜோன் என்ற கேரளத்து அதிபரின் கீழ் அக்கல்லூரி பெருமை பெற்றிருந்த காலம். பின், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் எஸ்.கே.பங்கர் அதிபராக இருந்த காலத்தில், அங்கு தன் கல்வியைத் தொடர்ந்து, அங்கிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நுழைந்தார்.

ஆத்மீகத்தில் தோய்ந்த மகாலிங்கசிவம் அவர்கள் யோக சுவாமிகளிடம் அதீத பக்தி கொண்டவர்.கனடாவிற்கு உயர்கல்வியைத் தொடரப் பயணமாகுமுன், யோகசுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றிருக்கிறார்.

மகாலிங்கசிவம் அவர்கள் தான் பயின்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்தார்.அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் தலைவராக நின்று, கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி நல்கியுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் கதீற்றல் தமிழ்க் கலவன் பாடசாலை 197374இல் மூடப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில், முத்துவெல மாவத்தையில் உள்ள தனியார் வீடொன்றை விலைக்கு வாங்கி , அதனை முகத்துவாரம் இந்துக் கல் லூரியாக மாற்றி, அங்குள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி நல்கிய பெருமகனாக மகாலிங்கசிவம் திகழ்கிறார்.

ஆத்மீக நம்பிக்கை மிக்க அவர், பொதுத் தொண்டுகளில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு உழைத்து வந்திருக்கிறார். அதி உயர் பதவிகளை வகித்தபோதும், எளிமையும் அன்பும் சாந்தமும் உதவும் உள்ளமும் கொண்டவராக விளங்கியிருக்கிறார்.

இராசையா மகாலிங்கசிவம் அவர்கள் அமரராகி இன்று பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன.

மு.நித்தியானந்தன்...

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா

## கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பம்



கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று முன்தினம் மூன்றாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலய திருவிழா எதிர் வரும் 13ஆம் திகதி விறு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

கொண்டாடப்படுகிறது.

உலகின் அனைத்து மக்களாலும் கோடி அற்புதர் எனக் கொண்டாடப்படுபவர் புனித அந்தோனியார் .

உலகெங்கும் திருமறையோரும் ஏனையோரும் பதுவா நகர் அந்தோனியாரை அண்டி அவரிடம் மன்றாடி, அவர் வழியாய் இறைவனிடம்எண்ணிலடங்கா ஆன்ம, உடல் நலன்களை பெற்று வருகின்றார்கள். புனித அந்தோனியார் போத்துக்கல் நாட்டவர். 1195 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் விஸ்பன் நகரில் பிறந்தார்.

அவரது பெற்றோர்கள் மார்டின்மேரி அவர்களுக்கு முன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்டினாந்து என்று பெயரிட்டனர்.



பெற்றோரைப் போல குழந்தையும் சிறு வயதிலிருந்தே இறை பற்றில் திளைத்து நற்குண சீலராக வளர்ந்து வந்தார். சிறுவன் பெர்டினாந்து ஒருநாள் மேற்றிராசன ஆலயத்தில் உருக்கமாக செபித்துக்கொண்டிருக்கும் போது தீடிரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன்அஞ்சி ஓடவில்லை. மனத்துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான்.

பிசாசு வெகுண்டுஓடியது. அந்த கல்லில் பதித்த திருச்சிலுவை அடையாளத்ததை இன்னும் காணலாம். கூரிய நுண்ணறிவு படைத்த பெர்டினாந்து திறம்படக் கல்வியில் தேர்வு பெற்றார். ஆன்ம குருவைக் கலந்தாலோசித்து புனித அகுஸ்தின் துறவறசபையில் சேர்ந்தார். ஊர் உறவினரை விட்டு விலகியிருப்பதே நலம் என்று உணர்ந்த பெர்டிணாண்டு தனது விருப்பத்திற்கிணங்க அதிபரின்அனுமதியின் படி கொயிம்ரா என்னும் இடத்திற்குச் சென்று குருத்துவக் கல்வி பயின்றார். 1219ம் ஆண்டில் 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார்.

மொராக்கோவில் வேத சாட்சிகளாக மரித்த ஐந்து பிரான்சிஸ்கன் சபையோரின் திருப்பண்டம் கொண்டு வரப்பட்டது. இதைப் பற்றி சிந்தித்த பெர்டினாந்து தானும் அவ்வாறே கிறிஸ்துவுக்காக வேத சாட்சியாக வேண்டும் என்று தனியாதத் தாகம் கொண்டார்.

எனவே 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி பிரன்சிஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான் பெர்ணாண்டு என்ற பெயரை மாற்றி அந்தோனியார் மடத்தின்பெயரால் அந்தோனி என்ற புதுப் பெயர் எடுத்துக்கொண்டார்.

சிறிதுகாலம் ஆபிக்காவிலுள்ள இஸ்லாமியருக்குப் போதிக்கச் சென்றார். உடல்நிலை சரியில்லாததால் மீண்டும் இத்தாலிக்கே திரும்பினார். போர்லி என்னுமிடத்தில் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி அங்குள்ள பேராலயத்தில்மறையுரையாற்றினார். மடைதிறந்த வெள்ளம் போல சொற்கள் பொழிந்தன. உள்ளத்தை ஊடுருவும் ஆழ்ந்த கருத்துக்கள்! அன்றுமுதல்அந்தோனியார் புகழ் பெற்ற பிரசங்கியானார்.

அதன்பின் பதுவை நகரில் திருமறையாற்றி பேரிடி முழக்கம் செய்தார். அவரின் திருஉரையை கேட்க ஆலயங்களில் இடம் கொள்ளவில்லை. கிறிஸ்தவ கோட்பாடுகளை அந்த நாட்களில் நிலவிய தப்பரைக் கொள்கைகளை எதிர்த்து ஆணித்தரமாகப் போதித்தார். 1946ஆம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் புனித அந்தோனியாரை திருச்சபையின் மறை வல்லுனர்களில் ஒருவராக அறிவித்தார்.

தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அவர் அனேக புதுமைகள் செய்தார். இதனால் 'கோடி அற்புதர் புனிதஅந்தோனியார்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

வாழ்ந்த காலத்தில் கடவுளுடைய கிருபையால் இவர் செய்த புதுமைகளால் இவரைநாடிவருவோர் அதிகமாயிற்று. இதனால் துறவியர்கள் மடத்தில் அமைதிக்குக் குந்தகம் ஏற்பட்டது. இதன் பொருட்டு மடத்தின் தலைமை குரு இவர் எண்ணிலடங்கா புதுமைகள் செய்ய தடைவிதித்தார். நாள் ஒன்றுக்கு 13 புதுமைகள் மட்டுமே செய்ய கட்டளையிட்டார்.

ஒருநாள் இவர் அன்றைக்குசெய்யகூடிய 13 புதுமைகளையும் செய்து முடித்தபின் மாலையில் வெளியே உலாவச் சென்றார். அப்பொழுது உயரமான கட்டடத்திலிருந்துஒருவர் தவறி விழுந்தவேளையில் 'அந்தோனியாரே என்னை காப்பாற்றும்' என்று உதவிக்குரல் எழுப்ப இவர் அவரை வானத்திலேயே அந்தரத்தில்தொங்கவைத்ததாகவும் அருகில் இருந்த மடத்திற்கு சென்று தலைமை குருவிடம் 14வது புதுமை செய்ய அனுமதி பெற்று அவரை தரையில்பத்திரமாகவும் இறக்கியதாகவும் கூறுவர். ஒரே நேரத்தில் அந்தோனியார் இரு இடங்களில் போதித்ததாகவும் புதுமைகள் செய்ததாகவும் வரலாறு உண்டு.

அந்தோனியார் குழந்தை இயேசுவை காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாகவும் கூறுவர்.

ஆகவேதான் படங்களில் அவரது கையில் குழந்தைஇயேசுவும் மற்றொறு கையில் திருமறை நூலை கையில் வைத்திருப்பதாகவும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. காணமல் போன பொருட்களைபுனித அந்தோனியாரை நினைத்து மன்றாடினால் கிடைக்கிறது என்ற விசுவாசம் இன்றும் மக்களிடம் காணப்படுகிறது. "கோடி அற்புதர்" "பதுவை பதியர்" "பசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்" "காணாமல் போனவைகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்" போன்ற அடைமொழிகளும் புனிதஅந்தோனியாருக்கே சொந்தம்.

1231ஆம் ஆண்டு பல ஊர்களில் மறையுரை ஆற்றியதாலும், கடும் தவ முயற்சிகளாலும் நோய்வாய் பட்டார். அதே ஆண்டில் ஜுன் மாதம் 13 நாள்இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்றபின் இறைவனில் இளைப்பாறினார். அப்போது அவருக்கு வயது 36.

அதன் பின் 336 ஆண்டுகளுக்குப்பின்அவருடைய கல்லறையானது தோண்டப்பட்டு அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருப்பது கண்டுபிக்கப்பட்டது. அந் நாக்கு இன்னும்பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**எல்.எஸ்**

## நாமும் திவ்விய நற்கருணையாக மாறுவதற்கு அழைக்கப்படுகிறோம்

**திருத்தந்தை பிரான்சிஸ்**



நம்மை இறைவாக்கினர்களாகவும், புதியதொரு உலகத்தை படைப்பவர்களாகவும் மாற்றும் நற்கருணைக்கு நன்றி கூறுவோம் எனதிருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.பிட்கப்பட்ட அப்பத்திலும், சீடர்களுக்குப் பருக கொடுக்கப்பட்ட கிண்ணத்திலும், மனிதகுலம் அனைத்திற்காகவும், இவ்வுலகின் நல்வாழ்விற்காகவும் தன்னையே வழங்குகிறார் இயேசு என்றும் அவர் தெரிவித்தார்.

இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா சிறப்பிக்கப்பட்ட ஞாயிறு தினத்தில் வத்திக்கானின், புனித பேதுரு பெஸிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கி செப உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிதமான மழைத்துளிகளின் நடுவே கரங்களில் குடைகளை ஏந்தி ஆர்வமுடன் காத்திருந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு மூவேளை செப உரையைத் தொடங்கிய திருத்தந்தை, கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் (மாற் 14:1226) 'அதை அவர்களுக்குக் கொடுத்தார்' (வச. 22) என்ற இறை வார்த்தையை மையக்கருத்தாகக் கொண்டுகருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

நற்கருணை, உண்மையில், அருள் கொடையின் பரிமாணத்தை முதலில் நமக்கு நினைவுபடுத்துகிறது.

இயேசு அப்பத்தை கையில் எடுத்தது அவர் மட்டும் உண்பதற்காக அல்ல, மாறாக, அதைப் பிட்டு எல்லோருக்கும் பகிர்ந்துகொடுப்பதற்கே. அதன்வழியாக அவருடைய அடையாளத்தையும் திருப்பணியையும் நமக்கு வெளிப்படுத்துகிறார்.

இயேசு, தனது உயிரை தனக்குரியதாக மட்டுமே வைத்துக்கொள்ளாமல் அதை நமக்கும் வழங்கினார், கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் நாம் அனைவரும் நிலைவாழ்வைப் பெறும்பொருட்டு அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (காண்க. பிலி 2:111)

அப்படியானால், நற்கருணையைக் கொண்டாடுவதும், அப்பத்தை உண்பதும், வாழ்க்கையிலிருந்து விலகிய வழிபாட்டுச் செயலோ அல்லது தனிப்பட்ட ஆறுதலுக்கான ஒரு தருணமோ அல்ல என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். இயேசு அப்பத்தை எடுத்து, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை, அவருடன் ஒன்றித்திருப்பது என்பது, மற்றவர்களுக்காக நாம் பிட்கப்பட்ட அப்பமாக மாறவும், நம்மிடம் என்ன இருக்கிறதோ மற்றும் நாம் என்னவாக இருக்கிறோமோ அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் நமக்கு உதவுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## வாழ்வின் அடிப்படையாக அமையும் நற்கருணை என்னும் மறைபொருள்

மனிதரை 'உறவுகளின் முடிச்சு' என்று பொருத்தமாக அழைக்கலாம். எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது அன்பு. அந்த அன்பு யாரிடம் காட்டப்படுகிறதோ அதற்கேற்ப, அது வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் எடுக்கிறது.

திருச்சபை கடந்த ஞாயிறு கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடியது. கிறிஸ்து தாம் பாடுபடுவதற்கு முன்பு பாஸ்கா உணவைத் தம் சீடர்களுடன் உண்பதற்கு, ஆசையாய் இருந்தார் (லூக் 22:16), அவர் நமக்கு வழங்கியுள்ள நற்கருணை என்னும் உயிருள்ள உணவை (யோவா 6:51) உண்ண நாமும் ஆசையாய் இருக்கிறோமா?

திருச்சபையின் வாழ்வு முழுவதும் நற்கருணை என்னும் மறைபொருளுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. நற்கருணையின்றித் திருச்சபை இல்லை, திருச்சபயின்றி நற்கருணை இல்லை என்று சொல்லும் அளவிற்குத் திருச்சபையும் நற்கருணையும் இணைந்துள்ளன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதுபோல, நற்கருணைப் பலிதான். 'கிறிஸ்துவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமாகும்,

நற்கருணைப் பலிதான். 'கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமாகும்' நற்கருணைப் பல் இரக்கத்தின் அருளடையாளம், ஒற்றுமையின் அடையாளம், அன்பின் பிணைப்பு. பாஸ்கா விருந்து, இவ்விருந்தில் கிறிஸ்து உண்ணப்படுகிறார்: அகம் அருளால் நிரப்பப்படுகிறது: வரவிருக்கும் மாட்சிமையின் உறுதி மொழி நமக்கு அளிக்கப்படுகிறது (திருவழிபாடு. எண் 47).

நற்கருணைக் கொண்டாட்டத்தில் கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும் நினைவு கூரப்படுகிறது அதே மறைபொருள் பிரசன்னமாகிறது: அதில் நாம் அருளடையாள முறையில் பங்கேற்கிறோம். நற்கருணை விண்ணக மகிமைக்கு அச்சாரமாகவும் உள்ளது எனவே, நற்கருணை முக்காலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

நற்கருணை: நம்மைக் கிறிஸ்துவுடனும், ஒருவர் ஒருவருடனும் இணைக்கிறது, நற்கருணை நம்மைக் கிறிஸ்துவுடன் நெருக்கமாக இணைக்கின்றது. "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" (யோவா 6:56).



நற்கருணையை உட்கொள்வதால் நாமும் கிறிஸ்துவாக மாறி, 'இனி வாழ்பவள் நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்' (கலா 2:20) என்ற நிலையை அடைகிறோம்.

புனித தோமா அக்குவினா வாழ்ந்த துறவற மடம் திடீரென்று தீப்பிடித்து எரிந்தபோது, அவர் நற்கருணைப் பேழையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "ஆண்டவரே! நாங்கள் வெந்து சாம்பலாகிக் கொண்டிருக்கிறோம்" என்று கதறினார், என்ன புதுமை! தீயானது தானாகவே அணைந்துவிட்டது. நற்கருணை தான் நமது காமத்தீ. காய்மகாரத்தீ, போட்டித்தீ, பொறாமைத்தீ, பேராசைத்தீ முதலிய பல்வேறு தீக்களை அணைக்கக்கூடிய ஆற்றல்மிகு அருளடையாளம்.

நற்கருணை நம்மைக் கிறிஸ்துவோடு மட்டுமல்ல, ஒருவர் ஒருவருடனும் இணைக்கிறது. "அப்பம் ஒன்றே, ஆதலால் தாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம்" (1 கொரி 10:17). எனவே, 'கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்கு கொள்ளும் நாமனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரே. உடலும் உயிருமாக விளங்க வேண்டும்'

கிறிஸ்துவர்களிடையே நிலவிவரும் பாகுபாடு, குறிப்பாக சாதி வேறுபாடு ஓர் உயிர்க்கொல்லி நோய்: குணப்படுத்த முடியாத புற்றுநோய். சாதி வேறுபாட்டுடன் நாம் உட்கொள்ளும் நற்கருணை நமது உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் தரும் மருந்தாக அமையுமா? அல்லது நம்மை நீதித் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உள்ளாக்கும் சாபக்கேடாக அமையுமா? நம்மை துரத்திக் கொண்டுவரும் கேள்வி .

**அருட்தந்தை வை.இருதயராஜ்**

## வணக்க மாதத்தில் மாதாவின் திருச்சுரூப பவனி









மே மாதம் மாதாவின் வணக்க மாதத்தை சிறப்பிக்கும் வகையில் பங்கு ஆலயங்களிலிருந்து வீடுகளுக்கு அன்னை மரியாளின் திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டு மாதம் முழுவதும் வீடுகளில் வழிபாடுகள் நடத்த ப்பட்டன.. மே மாதத்தின் இறுதி நாளில் மாதாவின் திருச்சுரூபங்கள் மீண்டும் ஆலயத்திற்கு ஒவ்வொரு பங்கு வட்டாரங்களிலிருந்தும் ஒன்றிணைந்து பவனியாக எடுத்துச் செல்லப்படும் காட்சிகள்.இது கொழும்பு பொல்ஹேன்கொட திரு இருதயநாதர் ஆலய பங்கில் இடம்பெற்ற நிகழ்வுகள் .

படங்கள்: உதவி செல்வி ஜெசி துரைராஜ்

## இந்திய பாராளுமன்ற...

வாக்குப்பதிவுக்குப் பின்னர் அனைத்து வாக்குச்சாவடிகளிலிருந்தும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தபால் வாக்குப் பெட்டிகள் வாக்கு எண்ணிக்கை மையங்களில் சீல் வைக்கப்பட்ட அறைகளில் பாதுகாக்கப்பட்டுள்ளன. பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் வாக்கு எண்ணும் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் இன்று (04) அதிகாலை 5 மணிக்குள் வந்து விட்டனர். இன்று பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வெளியே எடுக்கப்படுகின்றன.

வாக்குப் பெட்டிகளில் இருக்கும் சீல்கள் அகற்றப்பட்டு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களிலிருந்து வாக்குகள் எண்ணப்பட்டு இன்று முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

## பாடசாலைகள்...

இதன்படி, சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலிலுள்ள அனைத்து பாடசாலைகளும், கேகாலை மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று நடைபெறமாட்டாது.

தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள சகல பாடசாலைகளும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று மேல் மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா மாவட்டங்களிலுள்ள அனைத்து பாடசாலைகளும் கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளும் நடைபெறமாட்டாது.

நாட்டில் நிலவும் வானிலை அடிப்படையில், மாகாண அதிகாரிகள் வலய பணிப்பாளர்களுக்கு அறிவித்து பாடசாலைகளை நடத்துவது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படுமென்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## மறு அறிவித்தல் வரை...

மண் ஊற்றெடுத்து மீண்டும் மண் சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. இதனால் உடனடியாக மக்கள் அந்தப் பகுதிக்கு மீளச் செல்லக்கூடாது என்றும் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன தெரிவித்தார்.

அதேவேளை அனர்த்தங்கள் ஏற்படலாம் என சந்தேகிக்கப்படும் பிரதேசங்களிலிருந்து அலட்சியம் காட்டாமல் உடனடியாக மக்கள் வெளியேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு எச்சரிக்கை மறு அறிவித்தல் வரை மேலும் தொடர்கிறது.

வெள்ளம் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களை பார்வையிடுவதற்காக வெளியில் செல்ல வேண்டாம். இக்காலங்களில் நீர் நிலைகளில் குளிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு துரதிஷ்டவசமாக இரண்டு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், அனாவசியமான பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

மண் கடுமையான ஈரமாக காணப்படுவதால் மதில்கள், கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய அபாயம் காணப்படுகிறது. இபில் அவதானமாக செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். இம்முறை சீரற்ற கால நிலையின் போது சில பிரதேசங்களில் 400 மற்றும் 450 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி காணப்பட்டபோதும் ஒப்பீட்டளவில் பாதிப்புகளும் மரணங்களும் குறைவதற்கு நிறுவனத்தின் முன்னேற்பாடான அறிவுறுத்தல்களே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பல்கலைக்கழகத்துக்கு...

www.ugc.ac.lk இல் மூன்று மொழிகளில் விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்ய முடியுமென பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாணவர்கள் இந்த கையேடுகளை இணையத்தளம் மூலமே பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டும். புத்தகசாலைகளில் இது விற்பனைக்கு இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கையேட்டின் உள்ளடக்கங்களை மாற்றுவது அல்லது இதே போன்று அச்சிடுதல், வர்த்தக நோக்கத்துக்காகவும் அச்சிடுட்டு கையேட்டை வெளியிடுவது மற்றும் விநியோகிப்பது அல்லது கூறப்பட்ட செயல்களில் ஏதேனும் ஒன்றைச் செய்ய உதவுவது சட்டபூர்வமாக தடைசெய்யப்பட்டுள்ளது. 20232024 ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை இணைப்பதற்காக மாத்திரமே இக் கையேடு செல்லுபடியாகும்.

## கடும் மழையுடனான...

ரூபாவை அரசாங்கம் ஒதுக்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

மாவட்டச் செயலாளர்கள்,பிரதேச செயலாளர்கள் நிவாரண நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்படுவதுடன் மேலும் நிதி தேவைப்பட்டால் அதனை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு உட்பட நிவாரணங்கள் வழங்கப்பட்டு வரும் அதே வேளை, பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எத்தகைய அனர்த்த நிலைமைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு முப்படையினரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மீட்புப் பணிகளுக்காக படகுகளும் ஹெலிகொப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சீரற்ற காலை நிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சருடன் வளிமண்டலவியல் திணைக்களம், கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், நீர்ப்பாசன திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் இராணுவம், விமானப்படை, கடற்படை உள்ளிட்ட முப்படைனரின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் கடும்மழை,பலத்த காற்றுடனான சீரற்ற கால நிலையால் 21,353 குடும்பங்களைச் சேர்ந்த 84,749 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவு உட்பட உடனடி தேவைகள், நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களை தங்க வைப்பதற்காக 119 பாதுகாப்பான நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 29 மத்திய நிலையங்களும் மாத்தறை மாவட்டத்தில் 7 மத்திய நிலையங்களும் களுத்துறை மாவட்டத்தில் 46 மத்திய நிலையங்களும் காலி மாவட்டத்தில் 25 மத்திய நிலையங்களும் கொழும்பு மாவட்டத்தில் 11 மத்திய நிலையங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அகப்பட்டுள்ள மக்களை, அங்கிருந்து மீட்பதற்காக இராணுவம் மற்றும் கடற்படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக படகுகள் மற்றும் 3ஹெலிகொப்டர்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

சில பகுதிகளில் வெள்ளம் காரணமாக வீட்டிலிருந்து வெளியேற முடியாத நிலையில், பலர் தமது வீட்டு மேல் மாடிகளில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு படகுகள் மூலம் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கொலன்னாவை பகுதியில் 15,000 பேர் உள்ள நிலையில், அவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு தினங்களில் தற்போதைய நிலை சீரடையலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கல்வியமைச்சரோடும் சுகாதார அமைச்சரோடும் பேச்சுவார்த்தை நடத்தி விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேவேளை,நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பற்ற நிலையில் மரங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கான எந்த உத்தியோகபூர்வ நிறுவனங்களும் கிடையாது.

கொழும்பு மாநகர சபை பகுதியில் ஒரு இலட்சம் மரங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 300 மரங்கள் மிக மோசமான ஆபத்தான மரங்களாக கணிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து , இது தொடர்பில் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படும்.அதற்காக உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தரமற்ற கட்டிடங்கள் தொடர்பிலும் இதுவரை எந்த முறையான வேலைத் திட்டமும் கிடையாது.

## IMF கடன் ஒத்துழைப்பு...

ஒப்பந்தம் ஒன்றுக்கு செல்வதற்காக உச்சளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டின் பின்னர், இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மீளாய்வு மூலம், இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் வழங்கப்படும் என்றும் அதற்கிணங்க அந்த கடன் தவணை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கடன் ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் மூன்றாவது தவணையாக கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்டக் கம்பனிகள்...

வலியுறுத்தினார். உத்தேச சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதன் மூலம் நாளொன்றுக்கு 1,700 ரூபாவை பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவர்கள் எனவும் அவர் கூறினார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவின் படி ஒரு குடும்பம் வாழ்வதற்கு 1,700 ரூபா போதாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சம்பள ஆணைக்குழுவின் கட்டளை சட்டத்துக்கவாக சம்பளத்தை அதிகரிக்கும் அதிகாரம் உள்ளதுடன் இந்த கட்டளை சட்டத்துக்கமைய நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக அதனை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களில் எந்த சட்ட அடிப்படையும் இல்லை. இதனால், மனுவை ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்யுமாறும் நீதிமன்றத்தை அவர் கோரினார்.

இதனைத்தொடர்ந்து மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரோமேஸ் டி சில்வா மீண்டும் விடயங்களை தெளிவுபடுத்தினார்.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்ட நீதியரசர்கள், மனு ஊடாக கோரப்பட்ட இடைக்கால உத்தரவை வழங்காதிருக்க தீர்மானித்தனர். மனுவை மீண்டும் ஜூன் 26 ஆம் திகதி கவனத்தில் எடுத்துக்கொள்ள நீதி மன்றம் தீர்மானித்தது.

பலாங்கொட தோட்டக் கம்பனி உட்பட இருபத்தி ஒரு தோட்டக் கம்பனிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழில் ஆணையாளர் நாயகம் எச். கே.கே. ஐயசுந்தர சட்டமாஅதிபர் அடங்கலாக ஐம்பத்திரண்டு பேர் பிரதிவாதிளாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேயிலை மற்றும் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாட் சம்பளத்தை வழங்குவதை உறுதி செய்து, தொழில் அமைச்சரினால் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் அடிப்படை சம்பளமாக 1,350 ரூபா வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரிவித்தார். மேலும் தினசரி விசேட உதவித்தொகையாக 350 ரூபாவை வழங்குவதுடன் , மேலதிகமாக கொண்டுவரப்படும் ஒரு கிலோ தேயிலைக்கு 80 ரூபா கொடுப்பனவாக வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்களை வழங்கினால், தொழில் துறைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படுமென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் தோட்ட கம்பனிகளிடமோ அல்லது தோட்ட முதலாளிகளிடமோ எவ்வித ஆய்வாராய்வும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். இதனால் , தொழில் அமைச்சரின் இந்த முடிவு நியாயமற்றது, தன்னிச்சையானது என்று மனு தொடர்பில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், கடந்த மே மாதம் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் இந்த தீர்மானம் தொடர்பில் அதிகளவு விளம்பரம் செய்யப்பட்டதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு சம்பளம் வழங்கக்கூடிய நிலையில் நிறுவனங்கள் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் , குறிப்பிட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதை தடுக்கும் வகையில் பேராணை தடை உத்தரவு மற்றும் சம்பந்தப்பட்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ஆவணக் கேட்புப் பேராணை வழங்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இவ்வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து, ரிட் ஆணையை பிறப்பிக்குமாறு கோரி தோட்டக் கம்பனிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதற்கமைவாக சம்பந்தப்பட்ட மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோரை எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி நீதிமன்றில் விடயங்களை முன்வைக்குமாறு நோட்டீஸ் அனுப்புமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா சட்டத்தரணி குழாம் ஆஜரானது.

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட...

பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (03) கொலன்னாவ, களனி, அம்பத்தளை ஆகிய பிரதேசங்களுக்கு மேற்பார்வை விஜயம் மேற்கொண்டார். கொலன்னாவை சேதாவத்த வெஹெரகொட ரஜமஹா விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள அம்பத்தளை, கல்வான புராண ரஜமஹா விகாரை, சேதவத்த வெஹெரகொட புராண ரஜமஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் .எஸ். சில்வா வித்தியாலயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தியாலய பாதுகாப்பு நிலையம் என்பவற்றுக்குச் சென்ற ஜனாதிபதி, மக்களின் நலன்களைக் கேட்டறிந்ததோடு, அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை தொடர்ச்சியாக பூர்த்தி செய்யும் பணிகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொலன்னாவையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று இரவு முதல் உணவு வழங்குமாறு கொலன்னாவை பிரதேச செயலாளருக்கு அறிவித்த ஜனாதிபதி, அந்த மக்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து நிரந்தர வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென, ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். குழாய்களை பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வடிந்து செல்ல வழிசெய்து, மக்களை துரிதமாக மீள்குடியேற்றுமாறும் ஜனாதிபதி அறிவுறுத் தினார்.

அனர்த்த சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அங்கு சுட்டிக்காட்டினார். கொலன்னாவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அவர், பொலிஸாரின் பங்களிப்புடன் நடமாடும் ரோந்து சேவைகளை மக்கள் நடைமுறைப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்க வேண்டும் என்று இராணுவத்தினருக்கு பணிப்புரை வழங்கிய சாகல ரத்நாயக்க, மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார். மேலும், அனர்த்த நிலை குறையும் வரை மக்களுக்கு நிவாரணம் வழங்க முப்படையினர் ஆளணி பலத்துடன் தற்காலிக மத்திய நிலையமொன்றை அமைக்குமாறு அறிவுறுத்திய அவர், வெள்ளம் குறைந்த பிறகு ஏற்படக் கூடிய டெங்கு, எலிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த அனைத்து வீடுகளையும் அரசாங்கத்தின் உதவியுடன் இராணுவத்தினரின் பங்களிப்புடன் நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சட்டத்தரணி பிரேமநாத். சி.தொலாவத்த, எஸ்.எம்.மரிக்கார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியுடனான மேற்பார்வை விஜயத்தில் இணைந்துகொண்டனர்.

## இன்றைய பலன்கள்

### (04.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்** : பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம்** : எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** : ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்** : வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு** : வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம்** : விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம்** : பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம்** : தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## உலக சுற்றாடல் .... (3ஆம் பக்கத் தொடர்...)

பெற முயற்சிக்கின்றனர். ஆனால் நடக்க வேண்டியது அதுவல்ல. இந்த நேரத்தில் விமர்சனங்களை விட முக்கியமானது இடம்பெயர்ந்த மக்களை விடுவிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான்.

மேலும், வெள்ள நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் அதனை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பது அவசியம். அதற்காக அரசாங்கம் என்ற ரீதியில் எவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை கண்டறியுமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், இன்று (04) முதல் 10 நாட்களுக்குள் உள்ளூராட்சி மன்றங்களில் இதுவரை நிரந்தர நியமனம் பெறாத 8,400 ஊழியர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தி நிரந்தர நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைக் குழப்புவதற்கு ஒரு குழுவினர் செயல்படுவதையும் நாம் அறிவோம். எனவே, எந்த சூழ்நிலையிலும் அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## பெண்கள் வலுவூட்டல் ...(3ஆம் பக்கத் தொடர்...)

இலங்கை அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டுள்ள பெண்களுக்கெதிரான ஓரங்கட்டுதல்களை ஒழித்தல் மீதான சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை விரைவில் தயா ரிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இச்சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கப்படுவதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார். அது மாத்திரமன்றி, பாராளுமன்ற பெண் பிரதிநிதிகளின் ஒன்றியம் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களும் குழுநிலையில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பெண்களுக்கெதிரான ஓரங்கட்டுதல்கைள ஒழித்தல் மீதான சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அமைச்சரவைப் பத்திரத்தை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிப்பதாக பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா குழுவில் உறுதியளித்தார்.

இச்சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களைக் கொண்டு வருவதன் ஊடாகவே மேற்குறிப்பிட்ட சட்டமூலத்தின் முழுமையான நன்மையையும் அடைய முடியும் எனவும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டவரைஞர் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

## அனர்த்தத்தால் முற்றாக...

நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நிதியை உடனடியாக வழங்குமாறும் ஜனாதிபதி நிதி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது பொது நிர்வாக அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, முப்படையினர் மற்றும் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட செயலகங்கள், பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களின் அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூர் அனர்த்த முகாமைத்துவ கிராமப்புற சேவை அலுவலர்கள் தலைமையிலான அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து நிவாரணங்களையும் வழங்க ஏற்பாடு செய்து வருகின்றனர்அந்த அனைத்து அதிகாரிகளின் அர்ப்பணிப்பையும் பாராட்டிய ஜனாதிபதி, அந்த சேவைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் பொதுமக்களை அனர்த்த நிலைமைகளில் இருந்து மீட்டு இயல்பு வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கும் அரசாங்கம் வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் அரசாங்கம் உடனடியாக வழங்கும் என்றும் தெரிவித்தார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் கலந்துகொண்ட இச்சந்திப்பில் அதிக பாதிப்புள்ள மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் இலத்திரனியல் தொழில்நுட்பம் ஊடாக இணைந்துகொண்டனர்.

## உண்மை, நல்லிணக்க பொறிமுறைக்கான

# இடைக்கால செயலக ISTRM அதிகாரிகள் புத்தளம் மாவட்டத்துக்கு நேரடி விஜயம்







1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக மக்களுக்கு முகம்கொடுக்க நேரிட்ட சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயவும் சாத்தியமான தீர்வுகள் குறித்து கலந்துரையாடவுமென உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் (ISTRM) கடந்த மே 13 முதல் 15 ஆம் திகதி வரை புத்தளம் மாவட்டத்தில் பல கூட்டங்களை நடத்தியது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த கூட்டங்களின் போது, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் புத்தளம் மக்களின் முக்கிய பிரச்சினைகளையும் தேவைகளையும் அடையாளம் காண்பதற்காக பல்வேறு பங்குதாரர்களுடன் 09 அமர்வுகள் நடத்தப்பட்டன. நிர்வாக ரீதியான சவால்கள் மற்றும் வள ஒதுக்கீடு தொடர்பில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி ஹேரத் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் டபிள்யூ.எம்.எஸ்.ஜி கருணாரத்ன ஆகியோரைச் சந்தித்து இந்தக் குழு கலந்துரையாடியது.

மேலும், பிராந்திய செய்தியாளர்களுக்கான ஊடகச் சந்திப்பு நடத்தப்பட்டதுடன், இடைக்கால செயலகத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் பற்றிய தெளிவு வழங்கப்பட்டது. வனாதவில்லு மற்றும் கல்பிட்டி கிராம மக்களுடனான சந்திப்புகள் அந்தந்த பிரதேச செயலகங்களில் நடைபெற்றதோடு இதன் போது உள்ளூர் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதே சமயம் சிரம்பியடியில் உள்ள இலங்கை ஆபிரிக்க சமூகத்துடனான கலந்துரையாடலின் போது அவர்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள் பற்றி ஆராயப்பட்டது.

உத்தேச சட்டத்திருத்தம் குறித்து ஆராயவும் அவர்களின் நிலைப்பாட்டை அறிவதற்காகவும் பிரதேச செயலகத்தில் புத்தளம் மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விமானப்படை அதிகாரிகளுடன் இக்குழுவினர் மே 14 ஆம் திகதி சந்திப்பொன்றை நடத்தினர்.

முன்னாள் இராணுவ அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஜனசபை உறுப்பினர்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் உறுப்பினர்களுடன் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் சமூக மற்றும் நிர்வாக விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இது தவிர பிரதேச செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது புத்தளம் மாவட்டத்தின் நிர்வாகம் மற்றும் வள முகாமைத்துவ பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இறுதி நாளான மே 15ஆம் திகதி முகத்துவாரம் மீனவ கிராமத்தில் உள்ள கிராம மக்களிடம் அவர்களுக்கே தனித்துவமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து குழுவினர் ஆலோசனை நடத்தினர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் போதிய வளப் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்கள் மற்றும் வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் தரம் பாதிக்கப்படுவதாக இந்தக் கலந்துரையாடல்களின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும், மண் அரிப்பைத் தடுப்பது மற்றும் வனவளத்துறை மூலம் காணி ஒதுக்கீடு செய்வது குறித்தும் கவனம் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் புத்தளத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மாவட்டத்தில் உள்ள சில முக்கிய சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. மக்களுக்கு தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதையும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிகளுக்கு இங்கு சேகரிக்கப்படும் தகவல்கள் முக்கிய உதவியாக இருக்குமென அதன் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தின் கொள்கைப் பிரிவின் தலைவர் கலாநிதி யுவி தங்கராஜா, இணைப்பாளர் சரத் கொத்தலாவல, நிறைவேற்று அதிகாரி (பொது உறவுகள்) தனுஷி டி சில்வா மற்றும் சௌமியா விக்கிரமசிங்க, நிறைவேற்று அதிகாரி (சட்டம்) வை.எல். லொகுனாரங்கொட மற்றும் இடைக்கால செயலக அதிகாரிகள் இந்த கலந்துரையாடல்களில் பங்கேற்றனர்.

# Institute of Chartered Financial Analyst ஏற்பாட்டில் Capital Excellence Awards விருது நிகழ்வு




இலங்கை மூலதனச் சந்தையில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள *Institute of Chartered Financial Analyst* நிறுவனம் (CFA) ஏற்பாடு செய்துள்ள Capital Excellence Awards நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, உள்ளூர் மூலதனச் சந்தையின் சிறப்பை மதிப்பிடுவதற்காக 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த தனித்துவமான விருது வழங்கும் நிகழ்வின் 11ஆம் கட்டம் இந்த ஆண்டு நடைபெறவுள்ளது.

'அரசதனியார் உறவின் பலம்' என்ற தொனிப்பொருளில், இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு இலங்கையின் தற்போதைய அரசதனியார் கூட்டுறவின் நிலை மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தியுள்ளது. மேலும், இந்த தொனிப்பொருளின் அடிப்படையிலான கலந்துரையாடலின் மூலம், அரசதனியார் கூட்டாண்மையின் கடந்த கால அனுபவங்கள், தனியார் துறையின் பங்கு மற்றும் பிராந்திய முன்னோக்குகள் மூலம் அறிவைப் பெற நிதி ஆய்வாளர்கள் நிறுவனம் நம்புகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த *Chartered Financial Analysts* நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் திரு அருண பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு துறைகளில் திறமையான நிபுணர்கள் அதிக அளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதையும், இந்தத் துறையில் திறன்களில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளதையும் பார்க்க முடிகிறது. இத்துறையில் புதிதாக வருபவர்களுக்கு ஆராய்ச்சித் துறையில் ஏற்படும் நுட்பமான மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கும், எதிர்பார்க்கப்படும் உயர்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் தேவையான பயிற்சிகள் கிடைக்காததற்கு இதுவே காரணம்.

எனவே, இந்த புதிய ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சியின் தரத்தை அதிகரிப்பதற்கும் நாமும் முழுத் துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த *Capital Excellence Awards* அவர்களின் வளர்ச்சியில் ஒரு பெரிய மைல்கல்லைக் குறிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என தெரிவித்தார்.

பங்கு தரகர்கள், பகுப்பாய்வாளர்கள், *Chartered Financial Analysts* நிறுவனத்தின் நிபுணர்கள், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் போன்ற தொழில்துறையின் பல்வேறு துறைகளை ஒன்றிணைக்கும் இந்த விருது வழங்கும் நிகழ்வு, தொழில்துறையின் சிறப்பையும் முதலீட்டு ஆராய்ச்சி நிலைமைகளையும் உயர்த்துவதற்கு ஒரு காரணமாக இருக்கும்.

இந்த விருது வழங்கும் நிகழ்வில், சிறந்த ஆராய்ச்சி குழு, சிறந்த ஆராய்ச்சி அறிக்கை, சிறந்த கள அறிக்கை, சிறந்த முதலீட்டு உறவுகள் குழு, சிறந்த யூனிட் அறக்கட்டளை குழு மற்றும் சிறந்த சுற்றுச் சூழல், சமூகம், ஆட்சி அறிக்கை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு இந்த விருது வழங்கும் நிகழ்வில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் அந்தந்த துறைகளுக்கு வழங்கப்படும்.

பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகச் சிறப்பை அங்கீகரிப்பதற்காக விருது வழங்கும் நிகழ்விற்காக *Chartered Financial Analysts* நிறுவனம் முதன்முறையாக சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) விருதை அறிமுகப்படுத்தியுள்ளது என்பது மற்றொரு சிறப்பம்சமாகும். இந்த விருது வழங்கும் நிகழ்வின் வெற்றியாளர்கள், *Financial Analysts* நிறுவனத்தின் பட்டய உறுப்பினர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களைக் கொண்ட நிபுணர் மற்றும் நடுநிலையான நடுவர் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*Chartered Financial Analysts* நிறுவனம் என்பது 164 சந்தைகளில் 190,000 க்கும் மேற்பட்ட தொழில் நிபுணர்களுடன் தொழில்சார் சிறப்புக்கான தரநிலைகளை அமைக்கும் முதலீட்டு நிபுணர்களின் உலகளாவிய சங்கமாகும். 2001 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும், இது தொழில்சார் மேம்பாடு மற்றும் முன்னேற்றம் மற்றும் இலங்கையில் உள்ள பட்டய உறுப்பினர்கள் மற்றும் நிதி ஆய்வாளர்களின் விண்ணப்பதாரர்களின் முன்னேற்றத்தை ஆதரிக்கிறது. பட்டய நிதி ஆய்வாளர்கள் நிறுவனம் 250 க்கும் மேற்பட்ட CEO க்கள், தலைமை நிதி அதிகாரிகள், பல்வேறு துறைகளில் முகாமையாளர்கள், பங்கு ஆய்வாளர்கள், வங்கி நிபுணர்கள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பிற உயர் மட்ட நிதி வல்லுநர்கள் மற்றும் 300 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டுள்ளது.


## பதிப்புரிமைகள் எச்சரிக்கை அறிவித்தல்

**(Copyrights Caution Notice)**

**Rahmath Pathipagam (Chennai) Private Limited**

இந்தியா, தமிழ்நாடு 600004 சென்னை, மயிலாப்பூர், CIT கொலனி, இரண்டாம் பிரதான வீதி, 6 ஆம் இலக்கம் என்ற முகவரியைச் சார்ந்த இந்தியச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றான எமது வாடிக்கையாளரான Rahmath Pathipagam (Chennai) Private Limited ஆனது கீழே குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் 2024 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து இலங்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் அவற்றை பெற்றுக் கொள்ளலாமென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றது.

| BOOK NAME | BOOK NAME |
|---|---|
| SAHEEHUL BUHARI - 1 | SUNAN ABUDAWOOD - 1 |
| SAHEEHUL BUHARI - 2 | SUNAN NASAYEE - 1 |
| SAHEEHUL BUHARI - 3 | SUNAN NASAYEE - 2 |
| SAHEEHUL BUHARI - 4 | SUNAN NASAYEE - 3 |
| SAHEEHUL BUHARI - 5 | THAFSEER IBNU KASEER - 8 |
| SAHEEHUL BUHARI - 6 | JAMIED - THIRMITHI - 4 |
| SAHEEHUL BUHARI - 7 | JAMIED - THIRMITHI - 5 |
| SAHEEHUL MUSLIM - 1 | SUNAN NASAYEE - 4 |
| THAFSEER IBNU KASEER - 1 | SUNAN IBNUMAAZAH - 1 |
| SAHEEHUL MUSLIM - 2 | THAFSEER IBNU KASEER - 9 |
| THAFSEER IBNU KASEER - 2 | SUNAN ABUDAWOOD - 2 |
| SAHEEHUL MUSLIM - 3 | SUNAN IBNUMAAZAH - 2 |
| THAFSEER IBNU KASEER - 3 | THAFSEER IBNU KASEER -10 |
| SAHEEHUL MUSLIM - 4 | SHAMAYIL THIRMITHI |
| JAMIED - THIRMITHI - 1 | SUNAN ABUDAWOOD - 3 |
| THAFSEER IBNU KASEER - 4 | SUNAN ABUDAWOOD - 4 |
| THAFSEER IBNU KASEER - 5 | SUNAN ABUDAWOOD - 5 |
| JAMIED - THIRMITHI - 2 | SUNAN IBNUMAAZAH - 3 |
| THAFSEER IBNU KASEER - 6 | SUNAN IBNUMAAZAH - 4 |
| JAMIED - THIRMITHI - 3 | SUNAN IBNUMAAZAH - 5 |
| THAFSEER IBNU KASEER - 7 | MISKAT AL MASABIH |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் Rahmath Pathipagam (Chennai) Private Limited இன் பதிவு செய்யப்பட்ட தனியுரிமை உள்ளடக்கங்கள் ஆகும்.

இலங்கையிலுள்ள சட்ட நீதிமன்றத்தில் உரிமையாளரின் மேற்கூறப்பட்டுள்ள உரிமைகளை போலியாக்கும், பின்பற்றும், மீறும் அல்லது வேறுவகையில் வரம்புமீறும் எந்தவொரு நபர், நிறுவனம் அல்லது கூட்டுத்தாபனம் மற்றும் மேலே கூறப்பட்டவாறான எமது வாடிக்கையாளரின் இலங்கையிலுள்ள பதிப்புரிமையின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாத பாவனைக்கு வழிவகுக்கும் அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்களுக்கெதிராக எமது வாடிக்கையாளரின் சட்டரீதியிலான உரிமைகளை பாதுகாப்பதற்காக பொருத்தமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**Rahmath Pathipagam (Chennai) Private Limited** இனால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாமல் பாவனை செய்யப்படும் மேலே குறிப்பிட்டுள்ள சொற்கள் அல்லது வர்த்தக இலட்சினைகள் தொடர்பாக எவ்வித அறிவு/ தகவல் தெரியவரும் பொதுமக்கள் கீழே குறிப்பிட்டுள்ள சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றனர்.

**அவர்களின் சட்டத்தரணிகள்**

**SELVAM & SELVAM**

**புலமைச் சொத்து சட்ட நிறுவனம்**

**அலைபேசி: +91 9940067841|மின்னஞ்சல்: info@selvams.com**

**பழைய இல.: 9, வள்ளியம்மாள் தெரு, முதலாம் மாடி, கீழ்ப்பாகம், சென்னை-600010. தமிழ்நாடு, இந்தியா**


## எதிர்கால பசுமைத் தலைவர்களை உருவாக்க கூட்டிணையும் CIC மற்றும் கொழும்பு ஆனந்தா



இலங்கையின் எதிர்கால பசுமைத் தலைவர்களை உருவாக்குவதற்கு, விவசாயம் சார்ந்த பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான *CIC Holdings PLC (CSE: CIC)* அண்மையில் கொழும்பு ஆனந்தா கல்லூரியுடன் கூட்டிணைந்துள்ளது. இதற்காக *'Swastha by Link Natural'* அனுபவ மத்திய நிலையத்தில் CIC நடத்திய நிகழ்வில், கொழும்பு ஆனந்த கல்லூரி அதிபர் டி.எம்.எல்.பி. திஸாநாயக்க, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்களின் வீட்டு அறுவடைகளை CIC குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரோஷன் சேரசிங்க மற்றும் *CIC Agri Cluster*இன் முகாமைத்துவப் பணிப்பாளர் வருண மதவனராச்சி ஆகியோரிடம் கையளித்தனர்.

பாடசாலைக்கு *Grus Bags*, விதைகள் மற்றும் உரங்களை வழங்குவதற்கும், மாணவர்களின் ஆர்வத்தை வளர்ப்பதற்கும், உணவுப் பாதுகாப்பு, புவி வெப்பமடைதலை எதிர்த்துப் போராடுதல் மற்றும் நிலையான பசுமை முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற முக்கியப் பிரச்சினைகள் குறித்த அறிவை அவர்களுக்கு வலுவூட்டுவதற்கும் CICக்கு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பிரதிநிதிகள் நன்றி தெரிவித்தனர்.

CIC இன் அர்ப்பணிப்பு அதன் வணிக நடவடிக்கைகளின் உடனடி நோக்கத்திற்கு அப்பாற்பட்டது, இது நிலைத்தன்மை மற்றும் நெறிமுறை வணிக நடைமுறைகளின் பரந்த அம்சங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறையை பிரதிபலிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கிழக்கின் குரல்



## ஒலுவில் மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க அமைச்சர் டக்ளஸ் உறுதி

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

ஒலுவில் மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் விஷேட சந்திப்பு அண்மையில் (02) இடம்பெற்றது.ஒலுவில் வெளிச்சவீட்டு வாடியில் நடந்த இந்தச் சந்திப்பில் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழில் நீரியல்வள இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த டி சில்வா ஆகியோர் பங்கேற்று மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லாவின் தலைமையில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. மீனவர்களின் குறைபாடுகளை கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மிக விரைவில் மீனவர்களுக்கு நூறு வாடிகளை அமைத்து தருவதாக உறுதியளித்ததுடன், மின்சார இணைப்பை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார்.

ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் தாமதமடைவது, கடலரிப்பால் பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் மீனவர்களின் புதிய பிரச்சினைகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.



## ஐ.தே.க. காரியாலயம் திறப்பு



மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைச் செயலகம், ஏறாவூர் இலக்கம் 79 காட்டுப்பள்ளி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கியதேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளர் மொஹமட் பிலால் அபுபக்கர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறற்து.

பட்டிருப்பு தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் சிவலிங்கம் சுதர்சன், காத்தான்குடி அமைப்பாளர் உமர் லெப்பை, செங்கலடி அமைப்பாளர் கே.மோகனதாசன், எஸ்.ஏ.எம். முபாறக், ஹக்கீம் ஹுசைன், மொஹமட் இஸ்மாயில் பாரூக் உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர்.

## திருக்கோணேஸ்வரர் திருத்தலத்துக்கு காண்டாமணி

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருக்கோணேஸ்வர பெருமான் திருத்தலத்திற்கு ஆயிரம் கிலோவுடைய காண்டாமணி வழங்கப்பட்டது. வெளிநாடுகளில் வசிக்கும் சைவ அடியாளர்களின் நிதி யுதவியுடன்,இந்த காண்டாமணி செய்யப்பட்டது.லண்டனில் வசிக்கு ம் திருவாளர் ம. ஜெயசீலன், பா. சுரேசன் மற்றும் ச.லிங்கேஸ்வரன் ஆகி யோர் தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன.

நவீன முறையில் மின்சாரத்தில் இந்த காண்டாமணி இயங்கும். கடந்த வெள்ளிக்கிழமை (31) திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினரிடம் இது,வழங்கப்பட்டது. சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் செஞ்சொற் செல்வருமன ஆறுதிரு முருகனின் வேண்டுதலுக்கு அமையவும் திருக்கோணேஸ்வர பரிபாலன சபையின் அனுமதியுடனும் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.லண்டனில் வாழும் இந்துக்களின் முன்னெடுப்பில் உலகெங்கும் பரந்து வாழும் இலங்கை இந்துக்களின் பங்களிப்பும் இதற்குப் பெறப்பட்டது.

## தாந்தாமலை பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம்

### பெருந்திரளான பக்தர்கள் அரோகரா கோஷம் முழங்க பங்கேற்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

மண்முனை தென்மேற்கு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று (03) திங்கட்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலய பிரதம குருவுமான சிவசிறி மு.கு.சச்சிதானந்தக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளில் ஈடுபட்டனர். சரியாக 11.18 மணியளவில் பிரதான கும்பம் சொரியப்பட்டது. தொடர்ந்து ஏனைய பரிவார மூர்த்திகளுக்கான கும்பங்களும் சொரியப்பட்டன.



அரோகரா கோஷம் விண்ணைப்பிளக்க பெருந்திரளான பக்தர்கள் இதில்,கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபை தலைவர் மு.அருணன் தலைமையிலான பரிபாலன சபையினர் கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இதனை முன்னிட்டு கடந்த சனிக்கிழமையும் (01) ஞாயிற்றுக்கிழமையும் (02) எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த காலங்களில் விசேட பொதுப்போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அன்னதான ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தன .

## மூதூர் பிரதேச செயலாளருக்கு விஷேட கொடி அணிவிப்பு



(தோப்பூர் தினகரன் நிருபர்)

சர்வதேச புகைத்தல் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு "நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு,மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக்கிற்கு விஷேட கொடி அணிவிக்கப்பட்டது.மூதூர் பிரதேச செயலக தலைமை சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்து இக்கொடியை நேற்று (03) அணிவித்தனர்.மூதூர் பிரதேச செயலகத்தில் இந்நிகழ்வு நடந்தது.மே 31 தொடக்கம் ஜூன் 14 வரையான காலப்பகுதியில் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

## ஐ.தே.க. மருதமுனை வட்டார அமைப்பாளராக நியமனம்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

ஐக்கிய தேசிய கட்சியின் மருதமுனை 04 மற்றும் 05 ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக, டிலிப் நௌஷாட் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற நிகழ்வில், இவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டது.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட கால செயற்பாட்டாளரான டிலிப் நௌஷாட், பொது அமைப்புகள் ஊடாக சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். விஞ்ஞான பட்டதாரியான இவர், தற்போது கல்முனை மாநகர சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கத. மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், அக்கல்லூரியின் முன்னாள் அதிபரான மர்ஹூம் முஹம்மது அபூபக்கரின் கனிஷ்ட புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய,மாவட்ட மட்டங்களில் சாதித்த மாணவருக்கு கௌரவம்



(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

உயர்தரப் பரீட்சையில் தேசிய, மாவட்ட மட்டங்களில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று காலை காத்தான்குடி ஊடக அமையத்தில் நடைபெற்றது.

வாரவலம் ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, தலைவர் ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம் .ஏ.எம். ஹாதி, கலந்து கொண்டார்.

பொறியியல் தொழினுட்ப பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்ற அஹ்மத் ஷாகிர் முகம்மது ஷப்வான், வைத்திய துறையில் மாவட்டத்தில் முதலாவது இடம் பெற்ற முஹம்மது பாறுக் நஹ்ஜுல் பாதீக், வர்த்தக பிரிவில் முதலிடம் பெற்ற நவாஸ் யூசுப் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

## சம்மாந்துறை, இறக்காமம் பிரதேச செயலகங்கள் இணைந்து சிரமதானம்

(இறக்காமம் தினகரன் நிருபர் )

உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு வினைத்திறனுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பல்வேறு வேலை திட்டங்களை சம்மாந்துறை பிரதேச செயலகமும், சம்மாந்துறை பிரதேச சபையும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

இதன் ஆரம்ப தினமான நேற்று (03) சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஹிலால் ஜும்ஆ பள்ளிவாசல் பிரதான வீதி துப்புரவு செய்யப்பட்டது.

வீதியின் இரு மருங்குளிலும் மண்டியுள்ள புதர்கள் மற்றும் கழிவுப் பொருட்களை துப்பரவு செய்யும் பணிகள் சிறப்பாக இடம்பெற்றன. இரு பிரதேச செயலகங்களதும் செயலாளர்களின் இணைத் தலைமையில் இப்பணிகள் இடம்பெற்றன.

பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர் தலைமையிலான குழுவை நியமித்து மக்களின் குறைபாடுகளை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. கே. சாமிலா, கிராம சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## தைபா கல்லூரியில் ஐவர் பல்கலைக்கழகம் நுழைய வாய்ப்பு

(கல்முனை விசேட நிருபர்)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்து மாணவிகள் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

வெளியாகியுள்ள க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம், இக்கல்லூரியிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய பெரும்பாலான மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுள் 03 மாணவிகள் 3ஏ அதி சிறப்பு சித்திகளை பெற்றுள்ளதுடன், 05 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

சாய்ந்தமருதில் 2012 முதல்இயங்கி வரும் தைபா மகளிர் அரபுக் கல்லூரியிலிருந்து இதுவரை 40 க்கு மேற்பட்ட மாணவிகள் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். மேலும் பல மாணவிகள் பட்டப் படிப்புகளை சிறப்பாக பூர்த்தி செய்து வெளியேறியுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

## மாணவர்களை பாடசாலையுடன் இணைக்கும் விஷேட நடைபவனி

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

பாடசாலை சமூகத்தை பாடசாலையோடு இணைக்கும் நடை பவனி மற்றும் ஒன்று கூடல் நிகழ்வுகள் எதிர்வரும் (21) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காங்கேயனோடை அல் அக்ஸா மகா வித்தியாலயம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. இதுதொடர்பாக பாடசாலையில் (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது.பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களில் பழைய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் கையளிக்கப்படுவதுடன் ஒன்று கூடல் நிகழ்வும் இடம் பெறும்.

அத்தோடு பழைய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.



இலங்கை காலாட்படையின் 24ஆம், பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனெரல் அனில் கிரிசாந்த பெரேரா, அண்மையில், மல்வத்தையிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் தனது பதவியை பொறுப்பேற்றார்.இதன் பின்னர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடிய அவருக்கு பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கப்பட்டன. (படங்கள்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## அக்கரைப்பற்று தொழினுட்பக் கல்லூரிக்கு உபகரணங்கள்



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று தொழினுட்பக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வரும் மோட்டார் சைக்கிள் தொழில் நுட்பவியலாளர் கற்கை நெறிக்குத் தேவையான உபகரணங்களை, அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவ ரும், சமூக செயற்பாட்டாளருமான எம்.எம். றியாட் வழங்கினார்.

மூன்று இலட்சம் பெறுமதியான இந்த உபகரணத் தொகுதி, கல்லூரியின் அதிபர் எம்.எம்.ஹஸனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சீ.எம்.றகீப், நூலகரும், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தருமான எம்.றுமைஸ் மற்றும் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## கையடக்க தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டியொன்றிலிருந்து கையடக்க தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும் அதனை வாங்கிய நபரொருவருமாக இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ், நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றில் பூட்டி பாதுகாப்பாக வைத்திருந்த சுமார் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியை, சைக்கிளில் வந்த நபரொருவர் திருடி சென்றிருந்தார்.

கையடக்க தொலைபேசி களவாடப்பட்டமை தொடர்பில், பாதிக்கப்பட்டவரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் கையடக்க தொலைபேசியை களவாடிய நபரை கண்டறிந்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், களவாடப்பட்ட தொலைபேசியை வாங்கிய நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து தொலைபேசியையும் மீட்டுள்ளனர்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு

# சொந்தமான காணிகளில் குடியிருப்போருக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

(தலைமன்னார் விஷேட நிருபர்)



கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சியினால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளில் குடியிருப்போருக்கு உறுதிபத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான நிலத்தில் வசிக்கும் 1400 குடும்பங்களில் முதற்கட்டமாக 600 குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்குவதற்கான பணிகள் தற்போது இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தானின் மன்னார் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் நீண்டகாலமாக காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார்.

அண்மையில் குறித்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இதனடிப்படையில் தலைமன்னார் பாலமீன் ஓடை பகுதியிலுள்ள 800 குடும்பங்களுக்கும் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சோழமண்டலகுளம் பகுதியிலுள்ள 100 விவசாய குடும்பங்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்காக குறித்த காணிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

வீட்டுக்கு இரவில் தீ வைப்பு

## இருபது மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐம்பது பேர் அட்டகாசம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் 20ற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறை கும்பலொன்று பண்ணை வீடொன்றின் மீது, நேற்றுமுன்தினம் இரவு தாக்குதலை மேற்கொண்டு, தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளது.

அச்சுவேலி, கைத்தொழில் பேட்டையிலுள்ள வீடொன்றின் மீதே குறித்த வன்முறை கும்பல் தாக்குலை மேற்கொண்டுள்ளது.

குறித்த வீட்டில் தங்கியிருந்த இளைஞன் மீது நேற்றுமுன்தினம் மதியம் வன்முறை கும்பல் வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன், சிகிச்சைக்காக யாழ்,போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், நேற்றைய தினம் இரவு 8 மணியளவில் 20ற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் வந்த 50ற்கும் மேற்பட்டவர்கள் பண்ணை வீட்டினுள் புகுந்து தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்த உடைமைகளுக்கும் தீ வைத்து தப்பிச் சென்றுள்ளனர்.

அயலவர்கள் விரைந்து செயற்பட்டு தீயினை அணைத்ததுடன் அச்சுவேலி பொலிஸாருக்கும் தகவல் வழங்கினார்.

தகவலின் பிரகாரம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆரம்ப கட்ட விசாரணைகளில் முன்பகையே தாக்குதலுக்கு காரணம் என தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தொழிற்பயிற்சி அதிகாரசபை கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கோப்பாய் குறூப் நிருபர்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஏற்பாட்டில், இந்த ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கைநெறிகள் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிகள் கிளிநொச்சி, கண்டாவளை, பழைய கச்சேரி, பளை, பூநகரி ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், மின்னிணைப்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி படவடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், படவரைஞர், நீர்க்குழாய் பொருத்துநர், வெளியிணைப்புப் படகு இயந்திர திருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும்.

கற்கவிரும்புவோர் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர், கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் 155 ஆவது கட்டை அல்லது அனைத்துத் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு 0212285686, 0710318737, 0776139307 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா வதிவிட பிரதிநிதி யாழ். விஜயம்







(பருத்தித்துறை நிருபர்)

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் (MarcAndr Franche) யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்ததுடன் பல்வேறுபட்ட சந்திப்புக்களிலும் ஈடுபட்டார்.

நல்லை ஆதீனத்திற்குச் சென்ற ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரம்மாச்சார்ய சுவாமிகளை சந்தித்து ஆசிபெற்றதுடன், நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார். இந்தியா, இலங்கை இடையேயான பாக்கு நீரிணையை கடந்த சிறுவனை சந்தித்த ஐ.நா வதிவிடப் பிரதிநிதி அவருக்கு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

## புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை கடமைகளை பொறுப்பேற்க அறிவித்தல்

(யாழ். விசேட நிருபர்)

வடக்கில் அண்மையில் நியமனம் பெற்ற 374 பட்டதாரி ஆசிரியர்களும் நாளைய தினம் செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்க முடியுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். நியமனம் பெற்றவர்கள் நேற்றைய தினம் திங்கட்கிழமை கடமையேற்க வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், நேற்றைய தினம் நாடு முழுவதும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால், புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் நாளைய தினம் செவ்வாய்க்கிழமை கடமைகளை பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கானை பிரதேசத்தில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை

(யாழ். விசேட நிருபர்)

சங்கானை பிரதேசத்தில் 18 குடும்பநல உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 12 உத்தியோகத்தர்களே கடமையாற்றுவதால், சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளணி பற்றாக்குறை நிலவுவதால் சேவைகளை வினைத்திறனுடன் ஆற்றுவதில், சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதனால் குழந்தைகள், கர்ப்பிணி தாய்மார்களின் நலன்கள் கேள்விக்குள்ளாகும் நிலைமைகள் காணப்படுவதனால், பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு சம்மந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

## அமரர் சிவசிதம்பரத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

தமிழ்த்தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நல்லூர் உடுப்பிட்டித் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 22 ஆவது நினைவுதினம் நாளை புதன்கிழமை கரவெட்டியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளதுடன் நிகழ்வுக்கு அதன் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமை தாங்குகின்றார். நெல்லியடி பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அமரரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும்.

காலை 9 மணிக்கு கரவெட்டி அத்துளு அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள அமரர் சிவசிதம்பரத்தின் இல்லத்தில் நிறுவப்பட்டிருக்கும் அன்னாரின் சிலைக்கு

எஸ். சிதம்பரநாதன் தலைமையில் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்படும்.

# வடமாகாணத்தில் உயர்தர பரீட்சை பெறுபேறுகள்

## சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகா வித்தியாலய மாணவிகள் சிறந்த பெறுபேறு



வவுனியாவில் 102 வருட கால வரலாற்றை கொண்ட சூடுவெந்த புலவு அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் இரு மாணவிகள் அண்மையில் வெளியாகிய உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் முதன் முறையாக கலைப்பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ந ஹார் பாத்திமா சுஹா என்ற மாணவி தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களில் 3 ஏ சித்தியைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 12 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மனாஸ் பாத்திமா அப்னா என்ற மாணவி தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களில் 3 ஏ சித்தியைப் பெற்று மாவட்டத்தில் 31 ஆவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர்களுடன் தாஜீதீன் மொஹமட் சபீக் ஏ,பி,சீ பெறுபேற்றைப் பெற்று 94 ஆவது இடத்தையும் முஸ்தபா பாத்திமா 2 ஏ,சி பெறுபேற்றைப் பெற்று 103 ஆவது இடத்தையும், நியாஸ் அஸ்னப் 2ஏ,பி பெறுபேற்றைப் பெற்று மாவட்டத்தில் 122 ஆவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் பெற்றுள்ளனர்.

அத்துடன் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளதுடன், பாடசாலையின் 102 ஆண்டு வரலாற்றில் கலைப் பிரிவில் பெறப்பட்ட முதலாவது சிறந்த பெறுபேறு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்டத்தில் அல் அக்ஸா மகா வித்தியாலய மாணவி முதலிடம்



வவுனியா மாவட்டத்தில் அல் அக்ஸா மகா வித்தியாலய மாணவி நசுர்தீன் நசுரா க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

கலைப்பிரிவில் தமிழ், புவியியல், அரசியல் ஆகிய பாடங்களில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளதுடன், அகில இலங்கை ரீதியில் 75 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

தனது பெறுபேறு குறித்த கருத்து தெரிவித்த மாணவி,

வவுனியா, அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று நான் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளேன். அகில இலங்கை ரீதியில் 75 ஆவது இடத்தைப் பெற்றுள்ளேன். எனது ஊர் பாடசாலையின் பெயரை நல்லநிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் நான் கல்வி கற்றேன். என்னுடைய தந்தை கூலித் தொழிலாளி. அவர் பட்ட கஷ்டங்களைப் பார்த்து முன்னேற வேண்டுமென படித்தேன். எனது அம்மாவும் எனக்கு ஆதவு அளித்தார்.

அதுமட்டுமின்றி, எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எனது நண்பர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் நான் இந்த நிலையை அடைந்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.

## விஞ்ஞான பிரிவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் முன்னிலையில்

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞான பிரிவில் இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

அந்தவகையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் நான்கு மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன், மாவட்ட மட்டத்தில் 1,2,3,5 ஆம் நிலைகளை பெற்றுள்ளனர். அத்துடன் 8 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் 20 இடங்களை பெற்றுள்ளனர்.

வர்த்தக பிரிவில் 4 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன் ஒரு மாணவி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார். அத்துடன் 4 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் 20 இடங்களை பெற்றுள்ளனர்.

கணித பிரிவில் ஒரு மாணவி 3 பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தை பெற்றுள்ளார். அத்துடன் 6 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் 20ஆம் நிலைக்குள் சித்தியடைந்தனர்.

கலைப்பிரிவில் ஒரு மாணவி 3 பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் 23 ஆம் நிலையினை அடைந்துள்ளார். தொழில்நுட்ப பாடத்தில் மாவட்ட மட்டத்தில் 9 ம் நிலையினை ஒரு மாணவி பெற்றுள்ளார்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவர்கள் 3 ஏ சித்தி

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றிருப்பதாக பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தெரியப்படுத்தியுள்ளார்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கலைப்பிரிவில் தோற்றிய பொ.ராகவி, ச.சாம்பவி, ம.டிலோஜினி, ப.மதுசனா, தெ.நதீபா, ச.தசானி, செ.கலைக்சனா ஆகியோரும் விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய யோ.ராம்ராஜ், செ.சபீனா, கு.கரிகரன் ஆகியோரும் கணிதப் பிரிவில் தோற்றிய ஜெ.வைஷ்ணவி, சி.சனுஜா, சி.மயூர்தனன், ஆ.வேனுசன், அ.யனுசன், ம.தர்சிகா, ஸ்ரீ.வனோஜா, சு.சான்சுதன் மற்றும் வர்த்தக பிரிவில் தோற்றிய பா.கோபிசா ஆகியோர் 3 ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

அதேசமயம் 2 ஏ,பி பெறுபேற்றை 09 மாணவர்களும், 2 ஏ, சி பெறுபேற்றை 03 மாணவர்களும், 2ஏ, பி பெறுபேற்றை 10 மாணவர்களும் ஏ,பி,சி பெறுபேற்றை 08 மாணவர்களும், 3பி பெறுபேற்றை 04 மாணவர்களும் மற்றும் 2 பி,சி பெறுபேற்றை 15 மாணவர்களும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் உயர்தர பரீட்சையில் சாதனை

வவுனியா விசேட நிருபர்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வெளிவந்த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கணித பிரிவில் முதல் 10 இடத்தில் 8 இடங்களை தம் வசப்படுத்தியுள்ளது.

இதில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஏழாம், ஒன்பதாம், பத்தாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பெற்றுள்ளதோடு முதலாம் இடத்தினை ஆ.ஜிலோட்சன் என்ற மாணவன் பெற்றுள்ளார்.

இதேவேளை, விஞ்ஞான பிரிவில் பத்து இடங்களில் மூன்று இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பெற்றுள்ளார்கள். இதில் ஆறாம், ஏழாம், எட்டாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பெற்றுள்ளனர்.

இதேவேளை ஈ டெக்கில் முதலாம், மூன்றாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பெற்றுள்ளதோடு முதலாம் இடத்தினை கமலநாதன் லோகநாதன் பெற்றுள்ளார். பி டெக்கில் 7 ஆம் இடத்தினையும் வர்த்தக பிரிவில் முதல் 10 இடத்தில் மூன்றாம் மற்றும் ஐந்தாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஈரான் ஜனாதிபதி ரைசி பயணித்த ஹெலி விபத்துக்கு காரணம் என்ன?



ஈரான் ஜனாதிபதி இப்றாஹீம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியான் உள்ளிட்ட 09 பேரின் மரணத்திற்குக் காரணமான ஹெலிகொப்டர் விபத்து தொடர்பிலான புலன் விசாரணை அறிக்கைகள் வெளியாகியுள்ளன. ஈரானிய பாதுகாப்புப் படைகளின் பொதுத்தளபதியின் உத்தரவுக்கு அமைய முன்னெடுக்கப்படும் விரிவான விசாரணைகளின் ஆரம்ப மற்றும் இரண்டாம் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அறிக்கைகள் ஈரானிய ஜனாதிபதி பயணித்த ஹெலி விபத்து தோற்றுவித்திருந்த பல்வேறு சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்துள்ளன.

ஈரானிய ஜனாதிபதி உள்ளிட்ட அந்நாட்டின் உயர் பிரதிநிதிகள் கடந்த மே மாதம் 19 ஆம் திகதி ஈரானின் அயல்நாடான அசர்பைஜானில் நீரணையை திறந்து வைப்பதற்கான வைபவத்தில் கலந்து கொள்ளவென மூன்று ஹெலிகொப்டர்களில் பயணித்தனர். அவர்கள் வைபவம் நிறைவுற்ற பின்னர் ஈரானுக்கு திரும்பிக் கொண்டிருந்த சமயம், ஈரானிய ஜனாதிபதி உள்ளிட்ட பிரதிநிதிகள் பயணித்த ஹெலி, ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணத்தின் தப்ரீஸ் நகருக்கு அண்மையிலுள்ள பாதுகாக்கப்பட்ட வடமேற்கு மலைப் பகுதி பிரதேசத்தில் தொடர்பை இழந்தது. ஆனால் ஏனைய இரண்டு ஹெலிகளும் பாதுகாப்பாக தப்ரீஸ் நகரை வந்தடைந்தன.

மறுநாள் அதிகாலையில் குறித்த ஹெலிகொப்டர் 2500 மீற்றர் உயரத்தில் மலையில் விபத்துக்குள்ளாகி சிதைவடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதோடு, அதில் பயணித்த அனைவரும் பிரதேங்களாக மீட்கப்பட்டனர். இந்த ஹெலியின் விபத்துக்கு சீர்ற்ற காலநிலையும் பனிமூட்டமும் காரணமா? அல்லது ஹெலியின் இயந்திரக் கோளாறு காரணமா? அல்லது எதிரி நாடுகளின் சதி காரணமா? என்றபடி ஐயங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில் ஈரானிய பாதுகாப்புப் படைகளின் பொதுத்தளபதி விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில் விசாரணைக் குழுவினர் குறித்த ஹெலி இடம்பெற்ற இடத்திற்கு நேரில் சென்று விபத்துக்குள்ளான ஹெலிகொப்டர் குறித்து பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்தோடு இந்த ஹெலி தொடர்பில் பல்வேறு தரப்பு ஆவணங்களும் பரீட்சிக்கப்பட்டுள்ளதோடு விரிவான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்தக் குழுவினரின் ஆரம்ப அறிக்கை கடந்த மே மாதம் 23 ஆம் திகதி பின்னேரம் வெளியானது. இவ்விபத்தில் மரணமடைந்த ஜனாதிபதி இப்றாஹீம் ரைசி நல்லடக்கம் செய்யப்பட்ட சில மணி நேரங்களில் இவ்வறிக்கை வெளியானமை குறிப்பிடத்தக்கது.

அவ்வறிக்கையில் ஜனாதிபதி ரைசி பயணித்த ஹெலி கொப்டர் விபத்தில் குற்றவியல் நடவடிக்கைக்கான எந்த ஆதாரத்தையும் ஈரானிய இராணுவப் புலனாய்வாளர்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. குறிப்பாக ஹெலிகொப்டர் சிதைவுகளில் எந்தவொரு தோட்டா துளைகளோ அல்லது அது போன்ற தடயங்களோ எதுவும் காணப்படவில்லை,

இந்த ஹெலி திட்டமிடப்பட்ட விமானப் பாதையில் பயணித்துள்ளது. அது பயணப்பாதையை விட்டு வெளியேறியதற்கான தடயங்கள் இல்லை. அத்தோடு



விமான கண்காணிப்புக் கோபுரத்திற்கும் விமானிகளுக்கும் இடையிலான தகவல் தொடர்புகளின் போது சந்தேகத்திற்கிடமான உள்ளடக்கம் எதுவும் காணப்படவுமில்லை. ஏனைய இரண்டு ஹெலிகளுக்கும் ஜனாதிபதி ரைசி பயணித்த ஹெலி இடையிலான தொடர்பாடல் குறித்த ஹெலி தொடர்பை இழப்பதற்கான ஒன்றரை நிமிடத்துக்கு முன்னர் இடம்பெற்று இருப்பதும் பதிவாகியுள்ளது' என்று குறிப்பிட்டிருந்தது.

இவ்வறிக்கை இந்த ஹெலி விபத்து தொடர்பில் பூதாகரமாகி இருந்த பெரும்பாலான சந்தேகங்களையும் ஐயங்களையும் வலுவிழக்கச் செய்தது.

## விசாரணை அறிக்கைகள் வெளிபடுத்தியுள்ள உண்மை!

இந்நிலையில் இவ்விசாரணைக் குழுவின் இரண்டாவது அறிக்கை கடந்த 30 ஆம் திகதி வெளியானது. அவ்வறிக்கையில், குறித்த ஹெலிகொப்டரின் எச்சங்கள், பாகங்களின் மாதிரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனைகள், விபத்துக்கு பின்னர் அவை சிதறி காணப்பட்ட விதம், பிரதான பாகத்திலிருந்து ஏனைய பாகங்கள் காணப்பட்ட தூரம் என்பன குறித்தும் இவ்விசாரணையின் போது கவனம் செலுத்தப்பட்டது. அவை எதிலும் விபத்துக்குள்ளான ஹெலி கொப்டரில் இலத்திரனியல் போரின் தடயங்கள் இருப்பதை உறுதிப்படுத்தவில்லை.

அதேநேரம், குறித்த ஹெலிகொப்டர் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களுக்கு உட்படுத்தப்பட்டமைக்கான ஆவணங்கள் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அதன் போது அவையும் இவ்விபத்துக்கு பங்களிக்கத்திருப்பதற்கான தடயங்களை வெளிப்படுத்தவில்லை. மேலும் தொடர்பாடல் செயலிழப்பு அல்லது அலைவரிசை குறுக்கீடுகள் எதுவும் குறித்த ஹெலியை விமானக் குழுவினர் தொடர்பு கொள்வதை தடுத்திருப்பதாகவும் தெரியவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஹெலி கொப்டர் விபத்துக்கு நாசவேலை காரணமல்ல. அதற்கான எந்த தடயமும் இற்றை வரையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றுள்ள இவ்விசாரணைக்குழுவினர் இவ்விபத்துக்கான மூல காரணம் கண்டறியப்படும் வரை சோதனைகளும் தரவு பகுப்பாய்வும் தொடரும் என்றுள்ளனர். இவ்வாறான நிலையில் ஈரானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான இர்னா, 'சீரற்ற காலநிலை மற்றும் மூடுபனி காரணமாக ஜனாதிபதி பயணித்த ஹெலி உயர்ந்த மலைப்பகுதியில் மோதி தீப்பிடித்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது என்றுள்ளது.

ஆகவே ஈரானிய ஜனாதிபதி ரைசி, உள்ளிட்ட அந்நாட்டு உயர் பிரதிநிதிகள் பயணித்த ஹெலிகொப்டர் விபத்து தொடர்பில் நிலவிய பெரும்பாலான சந்தேகங்களையும், கேள்விகளையும் விசாரணையின் முதலிரு அறிக்கைகளும் பலமிழக்கச் செய்துள்ளன.



**மர்லின் மரிக்கார்...**

# கிழக்கில் இருந்து அதிகளவு பக்தர்கள் இம்முறை கதிர்காமம் பாதயாத்திரை



கிழக்கில் இருந்து இம்முறை அதிகளவிலான முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கிய காட்டுவழி பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர். வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 21 ஆம் திகதி நடைபெறும் நீர்வெட்டு தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட பலர் கதிர்காமம் முருகன் ஆலயம் நோக்கி புனித பாதயாத்திரை செல்கின்றனர்.

கிழக்கிலுள்ள கிராமங்களில் இருந்து பெருமளவிலான பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பாதயாத்திரை யில் ஈடுபடும் பக்தர்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் மற்றும் தனவந்தர்கள் அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடையாக யாத்திரை செல்லும் பக்தர்கள் அம்பாறை உகந்தை மலை முருகன் ஆலயத்தை சென்றடைந்து அங்கு காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் காட்டுவழியூடாக பயணம் செய்து கதிர்காமம் முருகன் ஆலயத்தை சென்றடையவுள்ளனர். காட்டுப்பாதை ஊடாக பயணிக்கும் பக்தர்களுக்கு குடிநீர், அன்னதானம், சுகாதார சேவைகளை செய்வதற்கு இந்துசமய தொண்டர் அமைப்புக்கள் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்...**

# ஹங்கேரிய கவிஞர் சாந்தோர் பெட்டோவியும், கவிஞர் கே.கணேஷின் மொழித் திறனும்

## எழுத்தாளர் கே. கணேஷின் இருபதாவது ஆண்டு (5 ஜூன் 2004) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது



ஹங்கேரிய தேசிய கவிஞரான பெட்டோஃபியின் கவிதைகள் இளம் எழுத்தாளரிடையே கனதியான தாக்கத்தை உருவாக்கி இருந்தன.

இதன் மூலகாரணியாக மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான கே.கணேஷின் மொழிபெயர்ப்புப் புலமையானது குறிப்பிடத்தக்கது. முல்க்ராஜ் ஆனந்த், கே. ஏ. அப்பாஸ், லூ சுன், ஹோ சி மின், சாந்தோர் பெட்டோஃபி முதலிய எழுத்தாளர்களின் படைப்புகளை கணேஷ் தமிழுக்குத் தந்துள்ளார். கே.கணேஷின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கை இருபதுக்கும் மேலாகும்.

ஹங்கேரிய தேசிய கவிஞரான பெட்டோஃபியின் ( Sandor Petofi ) கவிதைகளை தமிழில் தந்த பெருமைக்குரியவர் பிரபல எழுத்தாளரும் கவிஞருமான கே.கணேஷ் ஆவார். ஹங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி ஆக்கிய 'எத்தனைநாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே' எனும் நூலை தேசியகலை இலக்கிப் பேரவை வெளியிட்டது.


ஹங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி ஜனவரி 1, 1823 இல் பிறந்தார். ஹங்கேரிய நாட்டில் ஒரு சிறு கைப்பணியாளனின் மகனாக அவர் பிறந்தார். உலககெங்கும் 1973முதல் ஐ.நா.வின் கிளையான ஐ.நா.கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் அவர் நினைவை ஆண்டு தோறும் கொண்டாடுகிறது.

அவர் புரட்சிக் கவிஞர்களின் ஆதர்சகவியாக மிளிர்கிறார். உலகக் கவிஞனாகிய அவன் தனது நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டு அவதியுற்ற காலத்தில் பேனா ஏந்திய தன் கையால் வாளேந்தவும் தயங்கவில்லை. தனது ஹங்கேரியாம் 'மக்யார்' நாடு, ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் மன்னர் ஆட்சியை அகற்றவும் நாட்டிலே முடியரசை ஒழித்துக் குடியரசை நிலை நாட்டவும் அவர் போர்வீரனானார்.

பெற்றோரின் ஏழ்மை காரணமாக நடிகனாவும் அவர் தொழில் நடத்த வேண்டியிருந்தது. சத்திரங்களிலும், சாவடிகளிலும் தங்கி ஊர்சுற்றிய காலத்தே மக்களினூடே பழகிய அனுபவத்தில் கவிதைகள் படைக்கத் தொடங்கினார்.

காதலையும் வீரத்தையும் பாடிய அவரது கவிதைகள் நாட்டின் விடுதலை நாடிப் பாடத் தொடங்கின. மகாகவி பாரதியாரின் கவிதைகளில் காணும் ஆவேசத்தையும் துடிப்பையும் ஒத்தன அவரது கவிதைகள்.1849 இல் நடைபெற்ற விடுதலைப் போரில் 26 வயதில் பகைவனின் ஈட்டிக்கு சாந்தோர் பெட்டோவ்ஃபி இரையானார்.

**ஆக்க இலக்கிய கர்த்தா கே.கணேஷ்:**



ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் கவிஞராகவும் மட்டுமன்றி உயிரோட்டம் நிறைந்த மொழிபெயர்ப்பையும் கே.கணேஷ் முற்போக்கு தமிழ் இலக்கியத்திற்கு வழங்கியுள்ளார்.

கண்டியில் உள்ள அம்பிட்டி என்னும் இடத்தில் 2 மார்ச் 1920 இல் பிறந்த அவர், 5 ஜூன் 2004 இல் காலமானார்.

கணேஷ் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்னர் மதுரை தமிழ்ச்சங்கத்திலும், திருவையாறு ராஜா கல்லூரியிலும் கல்விகற்றார்.

கே.கணேஷ் இலங்கை இந்திய எழுத்தாளர்களுடன் மட்டுமன்றி, சோசலிஷ நாட்டு எழுத்தாளர்களின் அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டவர். அத்துடன் வெளிநாடுகளில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடுகளில் கலந்து கொண்டவர்.


நவசக்தி, லோகசக்தி போன்ற தமிழக இதழ்களில் கவிதைகள் எழுதினார். 1940களில் மணிக்கொடி இதழில் இரண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். இலங்கையின் பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதினார். 1940களின் பிற்பகுதியில் வீரகேசரியில் ஆசிரியர் குழுவிலும், 1950களில் சுதந்திரனில் செய்தியாசிரியராகவும் பணியாற்றினார்.

பத்திரிகையாளராக, கவிஞராக, திறனாய்வாளராக, பேச்சாளராக, அமைப்பாளராக, ஆலோசகராக பன்முகச் செயலாற்றல் படைத்தவர் கே. கணேஷ். சென்னையில் கற்றவேளையில் முனைப்புடன் இளைஞர் காங்கிரஸில் இயங்கி1936 ஆம் ஆண்டில் 'லோக சக்தி' எனும் பத்திரிகையை வெளியிட்டவர்.

1945 இல் கே. ஏ. அப்பாஸ், வெங்கடாச்சாரி, குயிலன், தி.க. சிவசங்கரன் ஆகியோருடன் இணைந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்துச் சிறந்த அமைப்பாளராகத் தம்மை இனங்காட்டினார்.

கணேஷ் தமிழகத்திலும் இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றியவர். 1946 இல் 'பாரதி' என்ற முற்போக்குக் கலை இலக்கிய இதழை கே. இராமநாதனுடன் இணைந்து தொடங்கி 1948 வரை நடத்தினார்.

மார்ட்டின் விக்கிரமசிங்க, எதரிவீர சரத்சந்திர போன்ற சிங்கள இலக்கியப் பிரமுகர்களுடன் இணைந்து இலங்கையின் தமிழ் சிங்கள எழுத்தாளர்களது ஒன்றிணைந்த ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பினார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# புலவர்மணி ஷரிபுத்தீன் ம.வியிலிருந்து ஓய்வுபெறும் புலவர்மணியின் புதல்வி



கிழக்கு மாகாணத்தில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு அடுத்ததாக தமிழறிஞராக வாழ்ந்து மறைந்தவர் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன். அவரது நாமம் தாங்கிய மகாவித்தியாலயத்தில் அவரது புதல்வி ஒருவருக்கு தனது முழுச் சேவைக்காலத்தில் மூன்று தசாப்தங்களை தடம்பதிக்கக் கிடைத்தமை பெரும்பேறாகும்.



புலவர்மணியின் இளைய புதல்வியான சித்தி ஆரிபா மக்பூல் தனது ஆரம்பக் கல்வியை புலவர்மணி ஷரிபுத்தீன் மகாவித்தியாலயத்திலும், ஆரம்பஇடைநிலை உயர்கல்வியை அல்மனார் மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

தான் ஆரம்பக் கல்வி பெற்ற பாடசாலையிலிருந்து ஓயவு பெறும் பாக்கியம் பெற்ற ஆசிரியை ஆரிபா தமது சேவைக் காலமான 32 வருடங்களில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இரு வருடங்கள் தவிர்ந்த ஏனைய காலப் பகுதிகளை புலவர்மணியில் நிறைவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும்.

1964 மே 29 ஆம் திகதி நியமனம் பெற்ற காலத்திலிருந்து தரம் ஒன்று முதல் நான்கு வரை தாம் கற்பித்த வகுப்புக்களை மேம்பாடு அடைய வைக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் ஆசிரியை ஆரிபா. 1995 இல் சாரணியத்தை இப்பாடசாலையில் உருவாக்கிய பெருமையும் இவருக்கே உண்டு.

ஒன்பது பெண்களையும் எட்டு ஆண்களையும் கொண்ட 17 பிள்ளைகளில் புலவர்மணியின் கடைசி மகளான ஆரிபா மக்பூல் புலவர்மணி ஷரிபுத்தீன் மகாவித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெறுவது ஆரம்பக் கல்விச் சமூகத்திறகான இழப்பாகும். புலவர்மணியின் அதிபர் ஏ.முகம்மட் அன்சார் தலைமையில் பாடசாலை சமூகம் பணிநயப்பு விழாவொன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

**ஜெஸ்மி எம். மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# கலைஞர் கருணாநிதியின் 101 ஆவது பிறந்ததினம் நேற்று அனுஷ்டிப்பு



கலைஞர் கருணாநிதியின் 101 ஆவது பிறந்தநாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. மெரினாவில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கருணாநிதியின் 101ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மெரினாவில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் கட்சி நிர்வாகிகளுடன் சென்று மரியாதை செலுத்தினார். கருணாநிதியின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்திய பின்னர் அண்ணாவின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது வீட்டில் கருணாநிதியின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதேபோல் டெல்லியில் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, கருணாநிதியின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணி முன்னாள் தலைவர் அம்பலந்துவ பஸால் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு



இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவரும், பதினாறு ஆண்டுகள் தேசத்தின் தேசிய அணிக்காக 53 சர்வதேச போட்டிகளில் விளையாடியவருமான பாணந்துறை அம்பலந்துவையைச் சேர்ந்த பஸால் நைஸர் தனது சர்வதேச உதைப்பந்தாட்டத்திலிருந்து சோகத்துடன் கண்ணீர்மல்க விடைபெற்றார்.

இவர் தனது தேசிய உதைப்பந்தாட்டத்தை ஆரம்பித்த கொழும்பு ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் தனது பங்களிப்புடன் தேசிய அணி அண்மையில் பூட்டான் நாட்டுடன் பெற்ற சர்வதேச வெற்றிக் களிப்புடன் அதே மைதானத்தில் சர்வதேச உதைப்பந்தாட்டத்திற்கு விடைகொடுத்தார். இவரது தேசிய உதைப்பந்தாட்ட ஆரம்பமும் விடைபெறலும் ஒரே மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாணந்துறை அம்பந்துவையைச் சேர்ந்த பஸால் நைஸர் தனது ஆரம்பக் கல்வியை அம்பலந்துவ இல்மா வித்தியாலயம் மற்றும் தொட்டவத்தை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் மேற்கொண்டார்.இதன் பின்னர் உயர் கல்வியை கொழும்பு சாஹிரா கல்லூரியில் தொடர்ந்தார்.இவர் 2001 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாடசாலை உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதன் முறையாக ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அல்பஹ்ரியா அணிக்காக கால்பதித்தார். அந்த ஆண்டில் சம்பியன் மகுடத்தை பாடசாலை சுவீகரிக்க முக்கிய காரணியாகவும் இவர் விளங்கினார்.

உதைப்பந்தாட்டத்தில் முன்கள வீரராக விளங்கிய இவர் மிக வேகமாக எதிரணி கோல்கம்பங்களை முற்றுகையிடும் சிறப்பு வீரனொருவராகவும் பிரகாசித்தார்.இலங்கையின் தேசிய அணியின் சீருடையில் தனது தேசத்துக்காக விளையாட வேண்டும் என்பது பஸால் நைஸரின் கனவாகவும் இலட்சியமாகவும் இருந்தது. இந்த நிலையில் தனது உயர்கல்விக்காக கொழும்பு சாஹிரா கல்லூரியில் இணைந்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முஹம்மது பஸாலின் உதைப்பந்தாட்டத் துறையில் மறக்க முடியாத வருடமாக உதயமானது. இவரது இலட்சியமாக விளங்கிய தேசத்தின் தேசிய அணியில் கால்பதிக்கும் கனவு இந்த ஆண்டில் நனவாகியது. தனது பதினெட்டாவது வயதில் இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணி வீரன் என்ற இலக்கை இவர் எட்டினார்.2018/2019 காலப்பகுதியில் தேசிய உதைப்பந்தாட்ட அணியின் தலைவன் பொறுப்பையும் பெற்றுக்கொண்டார்.

அண்மையில் கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற பஸால் கலந்துகொண்ட இலங்கைபூட்டான் நாடுகளுக்கிடையிலான சர்வதேச போட்டியில் இலங்கை 20 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டது. அந்த வெற்றிக் களிப்புடன் பஸாலின் சர்வதேச போட்டிகள் ஓய்வும் அறிவிக்கப்பட்டது. விளையாட்டு அணி சக வீரர்களும் ரசிகர்களும் இவரை வெகுவாகப் பாராட்டி இவரது ஓய்வை ஆசிர்வதித்தனர். இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தினால் பஸாலுக்கு நினைவுச் சின்னங்கள் பரிசளக்கப்பட்டன.உதைப்பந்தாட்ட சங்க தலைவர் ஜஸ்வர் உமர் பிரதான நினைவுச் சின்னத்தை கையளித்து வைத்தார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)




# இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற காலநிலை 2575 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு அனர்த்த நிலைமைகளால் 2575 குடும்பங்களைச் சேர்ந்த 9398 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரத்தினபுரி, குருவிட்ட, எலபாத, எஹெலியகொடை, நிவித்திகல, அயகம, கிரியெல்ல, பெல்மதுல்ல ஆகிய 08 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் இரத்தினபுரி மாவட்டத்தில் துரதிஷ்டவசமாக 04 மரணங்கள் பதிவாகியுள்ளன.



எலபாத்த பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 21 வயதுடைய பெண் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகியுள்ளார். கிரியெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் அதிக காற்றினால் விழுந்து உயிரிழந்துள்ளார். எஹெலியகொடை பிரதேச செயலகப்பிரிவைச் சேர்ந்த 11 வயது சிறுமி மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார். அயகம பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஆண் ஒருவர் மண்சரிவில் சிக்கி நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இரத்தினபுரி, எஹெலியகொடை மற்றும் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்த நிலைமைகள் காரணமாக 14 பாதுகாப்பான நிலையங்களில் 529 குடும்பங்களைச் சேர்ந்த 2219 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் எலபாத்த, எஹெலியகொடை மற்றும் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 1258 குடும்பங்களைச் சேர்ந்த 4874 பேர் தமது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மேலும் அனர்த்தம் காரணமாக 88 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன மேலும் தெரிவித்தார்.





அப்புத்தளை கொஸ்லாந்த, ஒக்வெல் தோட்டக்குடியிருப்புகளுக்கான பாதை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளது. இராஜாங்க அமைச்சர் தலைமையில் பாதை புனரமைப்பு பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன், மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

## கூரிய ஆயுதத்தால் குத்தி பெண் படுகொலை

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி, மஹிய்யாவ பகுதியில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு வேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேலாங்கன்னி இருதய ராணி என்ற 48 வயதுடையே பெண்னே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தனிப்பட்ட ஒரு பகை காரணமாக இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இக்கொலை தொடர்பாக அயலிலுள்ள 38 வயதுடைய நபர் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் பிரேத பரிசோதனை இடம்பெற உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## முச்சக்கர வண்டி திருட்டு

(மாத்தளை சுழற்சி நிருபர்)




மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்க கொள்ள கிராமத்தில் வீடொன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக மஹவெல பொலிஸ் நிலைய உரிமையாளர் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

நிக்ககொள்ள பாடசாலை வீதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கர வண்டியை இனந்தெரியாத நபர்கள் திருடி சென்றுள்ளதாக அம்முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டியை திருடி சென்ற நபர்களையும் முச்சக்கர வண்டியையும் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நுவரெலியா புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் வருடாந்த மரியாளின் பெருவிழா

நுவரெலியா புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தின் வருடாந்த மரியாளின் பெருவிழா நேற்றுமுன்தினம் (02) மாலை நுவரெலியா நகர மையத்தில் நடைபெற்றது.

146 வருட தொன்மையான வரலாற்றைக் கொண்ட நுவரெலியா நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாத் திட்டத்தின்படி, முதல் வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'அன்னையின் திருநாமப் பெருவிழா' மிஷனின் நிர்வாகியான கமிலாஸ் ஜான்ஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி, தேவாலய உறுப்பினர்கள் மற்றும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் பணியாற்றினர்.



நிகழ்ச்சித் தொடரின் முதற்கட்டமாக கண்டி புனித ஜோசப் மைனர் செமினரியின் தாளாளர் தந்தை லக்மால் பெரேரா தலைமையில் விசேட ஆராதனை நடைபெற்றது.

மாலையில் அன்னையின் திருவுருவச் சிலை ஏந்திய கண்கவர் ஊர்வலம் புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகி நுவரெலியா - கண்டி பழைய வீதியின் பிரதான வீதியூடாக பயணித்து லாசன் வீதி சந்தன லால் கருணாரத்ன மாவத்தை ஊடாக ஆலயத்தை வந்தடைந்தது. புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தின் மேற்கு வாத்தியக் குழுவினர், அன்னையர் மேல்நிலைக் கல்லூரியின் கீழக்கரை இசைக்குழு, என்பன இணைந்து ஆசீர்வாத ஊர்வலத்தில் ஈடுபட்டனர். இந்த கண்கவர் மற்றும் ஆசிர்வதிக்கப்பட்ட அன்னை ஊர்வலத்தை காண அனைத்து மதங்கள் மற்றும் அனைத்து இனங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வீதியின் இரு புறங்களிலும் திரண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

## ஹற்றன் பிரகடன செயற்றிட்டத்தை தேசிய மக்கள் சக்தி செயற்படுத்தும்

### விஜித ஹேரத் எம்.பி

(மாவத்தகம தினகரன் நிருபர்)

ஹற்றன் பிரகடனத்தின் செயற்றிட்டத்தை தேசிய மக்கள் சக்தி செயற்படுத்தும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்வதாக தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் முன்னணியின் 'மலையகம் 200' நிகழ்வு கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் கண்டி மாவட்ட தேசிய மக்கள் முன்னணியின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஹற்றன் பிரகடன செயற்றிட்டத்தின் மூலம் இந்தியாவம்சாவளி மக்கள் மலையகம் என்று சொல்லுக்கு இடமில்லை. எல்லோரும் ஒரே நாட்டவர்கள். வெவ்வேறு பிரிவுகளுக்கு இங்கு இடமில்லை. மேல் நாட்டவர்கள் கீழ் நாட்டவர்கள் என்கின்ற பிரிவுகள் கிடையாது. இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஒரே நாட்டவர்கள். சிங்கள மக்கள்



மற்றும் ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற சலுகைகள், வரப்பிரசாதங்கள் அனைத்தும் சரி சமனாக மலையகத் தோட்டபுற தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும். காணி, சம்பளம், சுகாதாரம் உள்ளிட்ட பல தரப்பட்ட அனைத்து வகையிலான உரிமைகளும் வழங்கப்படும். குறிப்பாக தோட்டத்தொழிலாளர்களுக்கு 2000 ரூபா சம்பளம் வழங்குவோம்.

இது மலையக மக்களுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இலங்கைக்கு பல வந்தமாக இந்தியத் தமிழர்கள் அழைத்து வரப்பட்டனர். இன்று மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 201 வருடங்களாகின்றன. அன்று அந்நிய சர்வாதிகார ஆக்கிரமிப்பாளர் உங்கள் முன்னோரை அழைத்து வரும் போது வெயிலிலும் மழையிலும் நனைந்து துன்பத்துக்குள்ளாகி பலர் மரணமடைந்தனர். கோப்பி, தேயிலை போன்ற



தோட்டங்களில் வேலை செய்து எமது நாட்டுக்கு அதிகளவிலான அந்நிய செலாவாணியை ஈட்டுத் தந்தார்கள். இன்று சரியாகப் பார்த்தோமாயின் இலங்கைக்கு அந்நிய செலாவாணியில் அதிக பங்கை பெற்றுத் தருபவர்கள் பெருந்தோட்ட மக்களே.

இந்த தோட்டங்களில் வியர்வை சிந்தி வேலை செய்கின்றனர். எமது பொருளாதார மேம்பாட்டுக்கு பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றனர். எனினும் இன்றும் காணி உரிமையின்றி வாழ்கின்றார்கள். 150 வருடங்களுக்கு முன்னர் வெள்ளையர்கள் வழங்கிய லயன் குடியிருப்புகளிலேயே வசித்து வருவதாக அவர் தெரிவித்தார். இதில் தேசிய மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் லால் காந்த , பேராசிரியர் விஜயகுமார், தேசிய மக்கள் முன்னணியின் ஆதவாளர்கள் மற்றும் பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.



க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி நு / தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற சகோதரிகளான பாலமுரளி மோகமித்ரா 2A,B சித்தியை பெற்று மாவட்டத்தில் 9 ஆவது இடத்தையும் பாலமுரளி விசாலி 2A,C பெறுபேறுகளை பெற்று மாவட்டத்தில் 44 ஆவது இடத்தையும் பெற்று வைத்திய துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(படம் :தலவாக்கலை குறூப் நிருபர்)

## மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா உயர் கல்விக்கூடத்தின் 23 வருட பூர்த்தி





மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா உயர் கல்விக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு 23 வருட பூர்த்தியை முன்னிட்டு வைத்தியர் ரைஸ் முஸ்தபா தலைமையின் கீழ் விசேட நிகழ்வுகள் வளாக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் எம்.ஏ.எம்.நிஸ்தாரின் ஒருங்கிணைப்பில், உயர் பீடத்தின் ஸ்தாபக தலைவர் காலம் சென்ற மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீமுக்கு நினைவு முத்திரை வெளியீடு, நினைவு நூல் வெளியீடு,புதிய வகுப்பறை கட்டடம் திறப்பு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் சிறந்த ஆளுமையுள்ள மாணவியருக்கும் பிரமுகர்களுக்கும் நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன.





தானிய வகைகளை கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற உணவு உற்பத்தி பொருட்களை லண்டனுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. இதற்கான காரியாலயம், அண்மையில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தலைமையில் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக இதன் பிரதான நிறைவேற்று அதிகாரி பிரதீப் தம்பையா தெரிவித்துள்ளார்.

(படங்கள் :நுவரெலியா தினகரன் நிருபர்)

## வர்த்தகரை காணவில்லை

ஹற்றன் நகரில் வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.ஹற்றனில் டன்பார் பகுதியில் கடையொன்றை நடத்தி வந்த தனது கணவரை கடந்த 29 ஆம் திகதி முதல் காணவில்லையென வர்த்தகரின் மனைவி ஹற்றன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹட்டன் அபோஸ்லி தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.ரஞ்சித்குமார் (வயது 46) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். காணாமல் போன வர்த்தகர் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், குறித்த வர்த்தகர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் ஹற்றன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகரை 0718591117 என்ற இலக்கத்திற்கு அழைக்குமாறு ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனம், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசியத் தலைவர் சாம் நவாஸ் தலைமையில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் உட்பட பலர் அடங்கிய குழுவொன்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவை வெளிநாட்டு அமைச்சில் அண்மையில் சந்தித்தது .

கடந்த வாரம் இந்தியாவின் அகமதாபாத்தில் 4 இலங்கையர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து ஊடகங்கள் வாயிலாக வெளிவருகின்ற செய்திகள் தொடர்பாக இக்குழுவினர் இராஜாங்க அமைச்சரிடம் அளவளாவினர். கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அந்த ஊடகங்களில் வெளிவருகின்ற சில செய்திகள் இலங்கை வாழ் முஸ்லிம்கள் உட்பட இலங்கையர்கள் மத்தியில் சந்தேகத்தை உண்டாக்குவதுடன், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் சீர்குலைப்பதற்கு இடமுண்டு. மக்களை குழப்புவதற்கு சில சக்திகள் முயற்சிக்கலாம். இக்கைது தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணை செய்து விடயத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று இக்குழுவினர் கேட்டுக் கொண்டனர்.இலங்கையர்கள் இந்தியாவுக்கு சுற்றுலாப் பிரயாணிகளாகவும், வியாபார நோக்கத்திற்காகவும் செல்கின்றனர். இக்கைது குறித்து சந்தேகங்களைக் களைந்து உண்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசியத் தலைவர் சாம் நவாஸ் தெரிவித்தார்.


## பெறுகை அறிவித்தல்

### மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விடயங்கள் அமைச்சு

### வடமத்திய மாகணம்

1. வடமத்திய மாகாண சபையின் மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரான, என்னால் வடமத்திய மாகாண சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் கீழ்க்காணும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு 2024 வரை வருட வழங்கல் (2024.07.01 முதல் 2024.12.31 வரை) சார்பாக அட்டவணையில் குறிப்பிடப்படும் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

A. யெஹெலி ஆலோசனை சேவை நிலையம் புலங்குளம் திஸா மாவத்த, அநுராதபுரம்
B. மகளிர் தடுப்பு நிலையம் - சாலியபுர, அநுராதபுரம்
C. “க்ஷேம” பாதுகாப்பு சிறுவர் பாதுகாப்பு நிலையம் சாலியபுர, அநுராதபுரம்
D. ஆன் சிறுவர் தடுப்பு நிலையம் - ரத்னாயக்க மாவத்த, அநுராதபுரம் (திணைக்கள வளாகம்)
E. அபய பொறுப்பேற்றல் நிலையம் - ரத்னாயக்க மாவத்த, அநுராதபுரம் (திணைக்கள வளாகம்)
F. சான்றிதழ் பெற்ற பாடசாலை - மடாடுகம, கெக்கிராவ
G. சான்றிதழ் பெற்ற சிறுவர் பாடசாலை - கிரிகெட்டுவெவ, கெபித்திகொல்லேவ
H. போசத் மகளிர் சிறுவர் அபிவிருத்தி நிலையம் - ஹத்தமுன வீதி, ஹிங்குரக்கொட

| வழங்கல்கள் மற்றும் சேவைகள் பற்றிய விபரம் | பெறுகை இலக்கம் | 119 தினங்கள் செல்லுபடியாகும் கேள்விப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (தானிய வகைகள்) | PD/04/2024/01/1 | ரூ. 53,700.00 | ரூ. 2500.00 |
| உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (41) | PD/04/2024/01/2 | ரூ. 97,600.00 | ரூ. 2500.00 |
| மரக்கறி வழங்குதல் | PD/04/2024/02 | ரூ. 48,500.00 | ரூ. 2500.00 |
| பழங்கள் வழங்குதல் மற்றும் இனிப்பு பண்டங்கள் | PD/04/2024/03 | ரூ. 26,500.00 | ரூ. 2500.00 |
| மீன், கோழியிறைச்சி, முட்டை, சோயாமீட், டின்மீன் மற்றும் கருவாடு வழங்குதல் | PD/04/2024/04 | ரூ. 94,800.00 | ரூ. 2500.00 |
| மருந்து வகைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் வழங்குதல் | PD/04/2024/05 | ரூ. 60,500.00 | ரூ. 2500.00 |

2. இக் கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.

3. மேற்படி வழங்கலுக்காக கேள்விகள் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்களால் அந்த ஒவ்வொரு கேள்வி சம்பந்தமாகவும் (1) வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. வழங்களுக்காக கேள்வி சமர்ப்பிக்கும் கேள்விதாரரின் வியாபார பெயர் பதிவு செய்திருப்பதாக வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் செயற்பாடுடைய வியாபார நிலையத்தை நடத்திச் செல்வதாக உறுதி செய்வதற்காக வர்த்தக அனுமதிப் பத்திரம் மூலம் உறுதி செய்தல் வேண்டும். இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களை வடமத்திய மாகாண சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தினால் 025 - 2222570/ 025-4928619 தொ.பே.இலக்கத்தின் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடிவதுடன் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.30 முதல் பி.ப. 3.30 வரை) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

5. ஒவ்வொரு வழங்களுக்கும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடுமாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணங்களை வடமத்திய மாகாண சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் ஆணையாளருக்கு காசு செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2024.06.05 முதல் 2024.06.25ம் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்குள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டவாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2024.10.22 வரை 119 நாட்கள் செல்லுபடியாகுமாறு “வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர்” பெயரில் பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை அல்லது மேற்படி பெறுமதிக்கு சமமான தொகையை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் ஆணையாளர்” பெயரில் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டொன்றை ஒவ்வொரு கேள்வியுடனும் வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. சகல கேள்விப் பத்திரங்களும் கேள்வி திறக்கப்படும் தினத்தில் இருந்து 2024.09.24ம் திகதிவரை 91 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. வடமத்திய மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதி, அநுராதபுரம் என்ற முகவரிக்கு 2024.06.18 முதல் மு.ப. 10.00 இற்கு கேள்விக்கு முன்னரான கூட்டமொன்றை நடத்துவதுடன் கேள்விதாரர்களுக்கு சமுகமளிக்கலாம்.

9. ஒவ்வொரு பெறுகைக்குமான கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரித்து “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” என வேறுவேறாகக் குறிப்பிட்டு 02 உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை திணைக்களத்திற்கு உணவுப் பொருட்களை அரை வருட வழங்கல் 2024ம் ஆண்டு” என்று குறிப்பிட்டு 2024.06.26 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு “செயலாளர்/ தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை அலுவல்கள் அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதி, அநுராதபுரம்” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன சகல வழங்கல்களுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். மேற்படி வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு மட்டும் சமுகமளிக்கலாம். (சகல கேள்விப் பத்திரங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்காக சமர்ப்பித்தல் வேண்டும்)

10. சகல கேள்விதாரர்களும் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதுடன், அமைச்சு பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர்/ தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு, மாகாண சுகாதாரம்,**
**சுதேச மருத்துவம், சமூக நலன்புரி,**
**நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை,**
**சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு,**
**மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாக கட்டிடத் தொகுதி,**
**அநுராதபுரம்**
**2024.06.04**


# ஹோமாகம கல்வி வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் திறன் வகுப்பறைகள்





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட "வர்னோதய சுஹுரு பாடசாலை திட்டத்தின்" கீழ் ஹோமாகம கல்வி வலயத்தின் நூறு பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை உருவாக்கும் செயற்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஹோமாகம மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹோமாகம பிரதேசத்திலுள்ள 37 பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அரச வர்த்தக பலநோக்கு கூட்டுத்தாபனம் மூலம் பாடசாலைகளுக்கு தேவையான உபகரண தொகுப்புகள் வழங்கப்படவுள்ளன. அதன்படி ஸ்மார்ட் போர்டு, லேப்டாப் கம்ப்யூட்டர், விஷுவலைசர், இன்டர்நெட் இணைப்பு உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய வகுப்பறைக்காக பாடசாலைக்கு 07 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கப்படவுள்ளது.

அங்கு பேசிய அமைச்சர்,

“ஒரு பாடசாலையின் முக்கிய பிரச்சினை திறன் வகுப்பறை இல்லாமை என்று சிலர் ஊடக நிகழ்ச்சியாக மாற்றியுள்ளனர். இலங்கையில் உள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் முறையான டிஜிட்டல் கல்வியை வழங்க ஒரு வகுப்பறை போதாது. எனவே சீன அரசின் 20 பில்லியன் அமெரிக்க டொலர் கடனின் கீழ், தனியார் நிறுவனத்துடன் இணைந்து மிகப் பெரிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு, டிஜிட்டல் கல்விக்கு தேவையான முழுமையான பாடசாலை அமைப்பை உருவாக்கும் பணி அடுத்த சில மாதங்களில் நடைமுறை யதார்த்தமாக மாறும்.

ஆனால் மேல்மாகாண சபையினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் ஹோமாகம கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 100% திறன் வகுப்பறையை பெற்றோர்கள், அரசாங்கம் மற்றும் நலன்விரும்பிகளின் ஆதரவுடன் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். தேவையான உபகரணங்களை வெளிப்படைத் தன்மையுடன் வழங்கும் பொறுப்பை அரச வர்த்தக பலநோக்கு கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்துள்ளோம். அதன்படி, மிகக் குறைந்த விலையில் மிக உயர்ந்த தரமான உபகரணங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இலவசக் கல்வியின் மூலம் கல்வி அமைச்சர் பதவி உட்பட பல உயர் அமைச்சுக்களின் பொறுப்பை ஏற்கும் நிலையை அடைந்துள்ள நான், கல்வியினால் மட்டுமே நாட்டின் பின்தங்கிய பிள்ளைகளின் வாழ்வை கட்டியெழுப்ப முடியும் என்பதை நான் புரிந்து கொண்டேன். நான் பொருளியல் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில், நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி அளித்து , அவர்கள் வாழ்வில் வெற்றிபெறும் பாக்கியத்தை காண சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அவர்களில், நாட்டின் உயர் நிர்வாக அதிகாரிகள் உட்பட பல பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டிற்கு பெருமளவிலான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் எமது பிரதேசத்தின் பிள்ளைகள் வரலாற்று ரீதியாக அநீதியை அனுபவிக்க நேரிட்டுள்ளது. பெரும்பாலான விடயங்கள் கொழும்புக்கே கிடைக்கும் நிலையில், மாகாணங்களில் சமச்சீர் அபிவிருத்தி இல்லை. எனவே, எனது கருத்தின்படி, கொழும்பை மையமாகக் கொண்ட மரக்கறிகளின் மொத்த வியாபாரத்தை மாகாணங்களுக்கு கொண்டு செல்ல மீகொட உட்பட நாட்டின் பல பகுதிகளில் பொருளாதார மையங்களின் வலையமைப்பு உருவாக்கப்பட்டது.

புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையும் பெருமளவிலான மாணவர்கள் பின்னர் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு படையெடுக்கின்றனர். இந்நிலையை மாற்றும் வகையில் பிடிபன ஹோமாகம பல தடைகளை தாண்டி மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் நிறுவப்பட்டது. ஆங்கில மொழி மூல கற்பித்தல் நடைபெறுகிறது. குழந்தைகளுக்கான ஒழுங்குமுறை திட்டம் தயாரிக்கப்பட்டது. குழந்தைகளின் வாழ்க்கையை வெற்றிகரமாக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். மிக சிறந்த முடிவுகளைப் பெற முடிந்தது.

இலங்கையின் முதலாவது ஸ்மார்ட் டிஜிட்டல் வகுப்பறை ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிக்கு கொரியாவால் நன்கொடையாக வழங்கப்பட்டது, மாதிரிப் பாடசாலையாகத் தோற்றுவிக்கப்பட்ட அந்தப் பாடசாலையில் பணியாற்றிய பெருமளவிலான ஆசிரியர்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் அதிபர்களாக நியமிக்கப்பட்டு சிறந்த சேவையாற்றி வருகின்றனர்.

நான் கல்வி அமைச்சராக இருந்த காலப்பகுதியில், கணிதத்தில் தோல்வியடைந்து பலர் உயர்தர கல்வியை இழந்திருந்தனர். இதனால், பலர் பாடசாலையை இழக்க நேரிட்டது. விளையாட்டு, இசை, நடனம் என பல துறைகளில் சிறந்து விளங்கினாலும், கணிதத்தில் தோல்வியடைந்ததால் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்படவில்லை. அந்த நிலையை மாற்றினேன். கணிதத்தில் தோல்வியுற்றாலும் உயர்தரம் படிக்கும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்தேன். கணித பாடத்திற்காக, மஹிந்தோதயா தொழில்நுட்ப ஆய்வகங்களில் ஆயிரம் கணித ஆய்வகங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு பாடசாலைக்கும் நாற்பது கணினிகள் கொண்ட கணினி ஆய்வகம் வழங்கப்பட்டது. இருபது கணினிகள் கொண்ட மொழி ஆய்வகம் வழங்கப்பட்டது. தொலைதூரக் கல்விப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் இதுபோன்ற ஆயிரம் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு பள்ளிக்கும் அறுபத்தி இரண்டு கணினிகள் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது,

மேலும், பாரம்பரியமாக மேம்பட்ட நிலையில் இருந்த மூன்று பாடப் பிரிவுகளுக்குப் பதிலாக, வளர்ந்த நாடுகளுக்கு ஏற்றவாறு தொழில்நுட்ப புதிய பாடத் தொடரை அறிமுகப்படுத்தினேன். 251 தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஒரே நேரத்தில் தகவல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அறிவியல் ஆகிய துறைகளை அறிமுகப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன. அப்போது, நிதியமைச்சும் இதற்காக பணம் ஒதுக்க முடியாது என்று கூறியது. பல பெரிய சவால்களை கடந்து 2011ம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு பலர் ஆதரவளித்த போதிலும் ஜே.வி.பி.யும் அதனுடன் தொடர்புடைய சிலரும் நாடு முழுவதும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். சரியான மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் போது, பல்வேறு தடைகள் உள்ளன. உயர்தர தொழில்நுட்பத்தைப் படிக்கும் மாணவர்களுக்கான தொழில்நுட்ப பீடங்களை நிறுவுவதற்கு எந்தப் பல்கலைக்கழகமும் ஆதரவளிக்கவில்லை. இறுதியாக, வித்யோதய பல்கலைக்கழகத்தில் மட்டும் ஐநூறு மாணவர்களை சேர்க்க உபவேந்தர் ஒப்புக்கொண்டார். இதுவரை இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்ப பீடங்கள் உருவாகியுள்ளன. ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உருவாகியுள்ளனர். கல்வி மூலம் நாம் அடைய முடியாத இலக்கை அடைய குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கல்வியை நிறுத்தக் கூடாது. கல்வியின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும்.

NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடத்தை நிறுவ ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ வசதிகளுக்காக போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் இதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்ததால், புதிய மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகில் குழந்தைகளுக்கு வாய்ப்புகளை வழங்க, குறுகிய சிந்தனையின்றி, அனைத்து குழந்தைகளையும் ஒரே மாதிரியாக நடத்தும் வகையில் இந்த திறன் வகுப்பறை திட்டத்தை தொடங்க உள்ளோம்.

அதனூடாக ஹோமாகம கல்விப் பிரதேசத்தை உயர்நிலைக்கு கொண்டு வருவதற்கு அனைவரும் பங்களிப்பார்கள் என நம்பப்படுகிறது.

இந்நிகழ்வில் ஹோமாகம வலயக் கல்விப் பணிப்பாளர் ஹேமந்த கமகே உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

UP-PY-6597 - TATA - SUPER ACE - SINGLE CAB - 2014 - ARCTIC WHITE - அதியுயர் விலைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 036677

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

YY-4683 BAJAJ 2012, JP-1920 BAJAJ 2004, THREE WHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 036351



## இலங்கை முதலீட்டுச் சபை

### பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2024.06.01 சனி மற்றும் 2024.06.04 செவ்வாய் தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**ROUTINE MAINTENANCE WORK OF BINGIRIYA EXPORT PROCESSING ZONE**

CONTRACT NO : BOI/ZM/BgPZ/2024/01

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2024.06.01 சனி மற்றும் 2024.06.04 செவ்வாய் தினங்களில் (Daily News) பத்திரிகையின் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை**

திருத்தம் பற்றிய அறிவித்தல்

## கொழும்பு மாநகர சபை

### விலைக்கோரல்களுக்கான அழைப்பு

### திண்மக் கழிவு முகாமைத்துவ சேவையை வழங்குதல்

கொழும்பு மாநகர சபையினால் 2024-05-16ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் ''(ME/SWM/55/2022)'' என்பது ''(ME/SWM/10/DI(Tender)/2024)'' எனத் திருத்தப்படல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

---

**பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்**



**இங்கிரிய தானாயம் பிளேஸ், இல. 136/4, எனும் முகவரியில் வசிக்கும்**
**கங்கானம் பதிரென்னஹலாகே ரத்நாயக்க**
(தேசிய அடையாள அட்டை இல. 550742101V)
என்பவர் 2024.06.01 முதல் **வ/ப ஆர்.எஸ். ரூபசிங்ஹ அடகு பிடிப்போர் (தனியார்) நிறுவனத்தில்** சேவையில் இல்லை என்பதுடன், அவருடன் எமது நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏதேனும் அல்லது வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாமென பொதுமக்களிடம் கேட்டுக்கொள்வதுடன் அவ்வாறு மேற்கொள்ளும் எந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிறுவனம் பொறுப்புக்கூறாது என இத்தால் அறிவித்துக்கொள்கிறோம்.

**வ/ப ஆர்.எஸ். ரூபசிங்ஹ அடகு பிடிப்போர் (தனியார்) நிறுவனம்,**
**இல. 42, புகையிரத நிலைய வீதி, மொறட்டுவை**
**தொ.பே - 0714277228**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## விலைமனு கோரல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### நிழற் பிரதி (Photo copy) சேவையை வழங்குதல்

01. இந்தத் திணைக்களத்தின் நாடு பூராகவும் அமைந்துள்ள 55 கிளை அலுவலகங்களுக்கு 2024/05 ஆம் ஆண்டுக்காக அலுவலகங்களில் காணப்படும் அரசாங்க ஆவணங்களை போட்டோ பிரதி சேவையை வழங்குவதற்காக திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் 2024.06.25 ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்புக்களின் பிரகாரம் தனித்தனியாகவோ அல்லது அனைத்து அலுவலகங்களுக்குமோ விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். விலைமனு ஆவணங்களை 2024.06.25 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ.12,500.00 தொகையை சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதை கணக்காளரிடம் (வழங்கல் பிரிவு) சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களை வழங்கல் பிரிவின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011-3070870 ஆகும். தேவை எனின் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.

03. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.06.11 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

04. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை, விலைமனு ஆவணங்களின் நிபந்தனைகளுக்கு அமைய ரூபா. 1,965,000.00 பெறுமதியான விலைமனுக் காப்பீட்டுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இணைப்பிரதிகளில் தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு 2024.06.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடவோ முடியும். விலைமனுக்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிழற் பிரதி சேவையை வழங்குவதற்காக விலைமனு கோரல் 2024/05" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. 2024.06.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்**
**திணைக்களக் கொள்முதல் குழுத் தலைவர்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை – சப்ரகமுவ

## விலைமனுகோரல்

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | CIDA | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|
| RDA/SAB/PD/TEN/CON/2024/04 | கற்கூடு சுவர் நிர்மாணம் மற்றும் மதகை அகலப்படுத்தி நிர்மாணித்தல், திரிவானகெட்டிய அகலவத்த வீதி (28/1 LHS) | C 5, C 6 | 108,000.00 |
| RDA/SAB/PD/TEN/CON/2024/05 | இலங்கொட அயகம வீதியில் தார் பூசுதல் (4+000 – 11+000 km) | C 5, C 6 | 162,000.00 |
| RDA/SAB/PD/TEN/CON/2024/06 | மதகு இலக்கம் 14/3 – 14/4 இடையே இடது பக்க தடுப்புச் சுவர் நிர்மாணம் யட்டியன்தொட்ட – புனாகல – மினாகல வீதி | C 5, C 6 | 157,000.00 |

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மேம்பட்ட வீதி பராமரிப்புக்காக தேசிய போட்டிரீதியான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு 2024 ஜுன் மாதம் 03ஆம் திகதி தொடக்கம் 2024 ஜுன் மாதம் 17 ஆம் திகதி வரை கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபை www.rda.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பணிப்பாளர் அலுவலகம் (சப்ரகமுவ),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**இரத்தினபுரி தொ.பே. 045 2222608**

---

NSB

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கேள்வி இல: NSB/PT/ITE/2024/06

### தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகளுக்கு மெல்லிய வாடிக்கையாளர் இயந்திரங்களின் (Thin Client Machines) பெறுகை – 750 எண்ணிக்கை

மெல்லிய வாடிக்கையாளர் இயந்திரங்களை வழங்குவதற்காக கீர்த்தி வாய்ந்த முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | Thin Client Machines |
| பெறுகை முறை | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 25,000.00 |
| சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பிணை முறியின் பெறுமதி | ரூபா 1,050,000.00 |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2024-06-24ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு |
| கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2024-04-06ஆம் திகதியிலிருந்து 2024-06-24ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2024-06-24ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக் குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

---

## மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

### கம்பனியின் பதிவு இல - PV 00201557

### 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளிற்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்டாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : மாஸ் ஏசியா இன்வெஸ்ட் மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல.61/1, பிலியந்தல வீதி, கட்டுவாவள பொரெலெஸ்கமுவ தற்போது இல.62/31,ஜீ பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : CHC/63/2023/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 05.04.2024 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 11.08.2023 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் | : G. J. David |
| முகவரி | : C/o SJMS Associates (Presently Deloitte Associates) Level 03, No. 11, Castle Lane, Colombo 4. |
| நியமன திகதி | : 05.04.2024 |

---

## மஹியங்கனை பிரதேச சபை

### 2025ம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத்திட்ட தயாரித்தலுக்கு அவ்வருடத்தின் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

மஹியங்கனை பிரதேச சபையின் 2025ம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு - செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு அவ்வருடத்தின் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகள் 2024.06.30ம் திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்குமாறு மஹியங்கனை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் சகல பிரஜைகளுக்கும் இத்தால் அழைப்புவிடுக்கின்றேன்.

**மஹியங்கனை பிரதேச சபை அலுவலகத்தில்**
**2024.06.03**

**கே.எஸ். சந்ரசேன,**
**சபை செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மஹியங்கனை**

---

## NALLUR PRADESHIYA SABHA

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the European Union towards the cost of Local Development Support Project, and intends to apply part of the proceeds of this grant to payments under the Contract for the goods stated in the Table below.
2. **The Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the goods stated in the Table below.
3. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
4. Interested eligible bidders may obtain further information from **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil (T.P No: 0212222700, Fax No: 0212220138)** and inspect the bidding documents at **Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **04-June-2024 until 23-June-2024** between **09:00 AM** to **02:00 PM** on public working days.
5. Qualification requirements include: to qualify for contract award are included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address "**Secretary, Nallur Pradeshiya sabha, 14/5 Karuvapulam Road, Kokuvil**" on Public Working Days between **09:00 AM** to **02:00 PM** from **04-June-2024 until 23-June-2024** and upon payment of a non-refundable fee stated in the Table below. The method of payment will be **Cash or Card.**
7. Bids must be delivered to **The Chairman, Local Authority Procurement Committee, Nallur Pradeshiya sabha 14/5 Karuvapulam Road, Kokuvil** on or before **24-June-2024** at **10.00AM**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person. All bids must be accompanied by a Bid-Security and the validity periods of bid security as given below.
8. The complete bid should be forward in two copies as original and duplicate. The Original and Duplicate should be enclosed separately and mark original and duplicate respectively in sealed envelopes. Both envelopes should be marked the "**Bid Number**" on top left-hand corner of the envelop.
9. The pre bid meeting will be held at **Nallur Pradeshiya sabha** on **18-June-2024** at **10.00AM**. Interested Bidders may participate in this meeting their own expenses.

| Bid No | Name of Procurement | Bid Form Fee | Period of Contract | Bid validity Period from the date of opening | Bid security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required Period |
| LDSP/NP/JAF/NPS/2024/PT3/01(c) | Renovation of Office Building (Supplying and Fixing Air conditioners for Upper Floor) | 3,000.00 | 4 weeks | 63 days (25-Aug-2024) | 75,000.00 | 22-Sep-2024 |

The Chairman
Local Authority Procurement Committee
Nallur Pradeshiya sabha
14/5 Karuvapulam Road
Kokuvil

04-June-2024

---

இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு நிறுவனம்

**தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது**

## கெப் சேவையை வழங்குவதற்காக கேள்வி ஆவணங்களை அழைத்தல்

2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு நிறுவனத்திற்காக
வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக (கெப் சேவை) கேள்வி ஆவணங்கள் அழைக்கப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்டு கொழும்பின் சுற்றுப்புறத்திலுள்ள கார்கள்/பயணிகள் வேன்கள் பரிசீலனை செய்யப்படும்.

பின்வரும் வாகனங்களின் அனைத்து நான்கு வகுதிகளையும் வழங்குவதற்கான ஆற்றலை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

1. வளிச்சீராக்கலுடனான கார்கள்- என்ஜின் கொள்ளளவு- 1000 சிசி இலிருந்து 1500 சிசி இற்கிடையில்.
2. வளிச்சீராக்கலுடனான பயணிகள் வேன்கள் - (ஆகக் குறைந்த ஆசன வசதி - 06)
3. வளிச்சீராக்கலுடனான பயணிகள் வேன்கள் - (ஆகக் குறைந்த ஆசன வசதி - 09)
4. வளிச்சீராக்கலுடனான பயணிகள் வேன்கள் - (ஆகக் குறைந்த ஆசன வசதி - 13)

2024.06.04 ஆம் திகதியிலிருந்து 2024.06.25 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 இ.ரூபா + SSCL & VAT (ரொக்கப் பணம் மாத்திரம்) ஆகியவற்றைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

விலைமனுக்கள் 2024.06.26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய ஒப்பந்தங்கள்),**
**இல.: 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08.**

---

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 6000 எண்ணிக்கையான 150Ah - NEW SEALED TYPE (SEMI MAINTENANCE FREE) BATTERIES வழங்கி விநியோகித்தல்

**SLTB/TS/GEN/03/2024**

1. தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக இ.போ.சவுக்கு 6000 Nos. 150Ah New Sealed Type (Semi Maintenance Free) Batteries வழங்குதல் விநியோகித்தல் உள்ளூர் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகவர்கள் - அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து 2024.06.25ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிவரையும் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.06.04ஆம் திகதியிலிருந்து 2024.06.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு - 05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|
| 30 நாள் கடன் அடிப்படையில் இ.போ.சவிற்கு 6000 Nos. 150Ah New Sealed Type (Semi Maintenance Free) Batteries வழங்கி விநியோகித்தல் | 5 mn |

2. விலைமனுக்கள் 2024.09.25ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்த ஏற்றுக் கொள்ளுவதிலிருந்து இருந்து ஒரு வருடத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2024.10.25 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவரானமையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப் பிணையும் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2024.06.13 மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு - 05, கிருள வீதி, 200, இ.போ.ச பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவுபெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ம் மாடி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் Supply and Delivery of 6000 Nos. 150Ah New Sealed Type (Semi Maintenance Free) Batteries For SLTB எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024.06.25 பி.ப. 2.00 இற்கு மூடப்படும் அத்துடன் கொழும்பு - 05, கிருள வீதி, 200ஆம் இலக்கத்தின் இ.போ.ச. பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ம் மாடி, செத்சிறிபாய கட்டம் II - பத்தரமுல்ல**

**விசாரணைகள்:** **பிரதம பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706111, 0771056204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## இலங்கை போக்குவரத்துச் சபைக்கு டியூப்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனுக்கள்

**பெறுகை இல : SLTB/TS/GEN/2024/12**

1. தகைமையான விலைமனுதாரர்களிடம் இருந்து இ.போ.சவுக்கு டியூப்களை வழங்கி விநியோகிப்பதற்காக 2024.06.26 ஆம் திகதியன்று பி.ப 02.00 மணி வரையும் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.06.04ஆம் திகதியிலிருந்து 2024.06.25ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி, 200ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விபரம் | விலைமனுப்பிணை |
|---|---|
| 30 நாட்கள் அடிப்படையில் 46328 எண்ணிக்கையிலான டியூப்களை வழங்கி விநியோகித்தல் | ரூ. 03 mn |

2. இந்த விலைமனுவின் கீழ் டியூப்களின் உள்ளூர் உற்பத்தியாளர்கள் / அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் விலைமனுக்கோருவதற்கு தகைமை பெறுவர்.
3. இதற்காக தகைமை கொண்டுள்ள விலைமனுதாரர்களுக்கு உள்ளூர் முன்னுரிமை வழங்கப்படும்.
4. விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2024.06.13 பி.ப 12.00 இற்கு கொழும்பு - 05 கிருள வீதி, 200, இ.போ.ச, பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2024.10.26 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவரான்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024.09.26 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து ஒரு (1) வருடத்திற்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும். கடன் வசதிகள் 30 நாட்களில் காலாவதியாகும்.
7. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
9. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.06.26 பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ம் மாடி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்குப் பிரிவில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'Supply and Delivery of Tubes for SLTB' என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ம் மாடி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்குப் பிரிவில் இதற்காக விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ம் மாடி, செத்சிறிபாய கட்டம் II - பத்தரமுல்ல**

**விசாரணைகள்:** **பிரதம பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706111, 0771056204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457**

The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்!

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாண, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு – மேல் மாகாணம்)

## திவுலப்பிட்டி முன் தயாரிப்பு கூடத்திற்கு ஆற்று மணல் வழங்கல்

இந்த அதிகாரசபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திவுலப்பிட்டி கூடத்திற்கு ஆறு மாத தேவைக்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கீழ் குறிப்பிடப்பட்ட விலைமனு சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதியை கொள்வனவு செய்ய முடியும்.

**விலைமனு சுருக்கம்**

| விலைமனு இலக்கம் | விபரம் | அளவு | கேள்வி படிவ கட்டணம் (அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | விலைமனு பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பணமாக (ரூபா) | வங்கி/ காப்புறுதி பிணை (ரூபா) |
| PRDA/WP/PRO /2024/35 | ஆற்று மணல் வழங்கல் | 500 கியு. மீற்றர் | 1,000.00 + 2.5% + 18% | 20,500.00 | 40,000.00 |

02. இதற்காக விலைமனு ஆவணத் தொகுதியை 2024.06.06 - 2024.06.20 வரை வார நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை மேல் குறிப்பிடப்பட்ட கேள்விப் படிவக் கட்டணத்தின் கீழ் இந்த அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான விலைமனு பிணை பணமாக அல்லது வங்கி பிணை ஒன்றாக பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சமர்ப்பித்தில் வேண்டும்.

03. விலைமனு வழங்கலுக்கு தகுதி பெறுவதற்கு விலைமனு தொகை 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் சந்தர்ப்பங்களில் விலைமனுதாரரினால் 1987 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பிரிவின் கீழ் நிறுவன பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. விலைமனுக்களை ஏற்பது 2024.06.24 ஆம் திகதி பி.ப. 02.30 என்பதோடு அந்த சந்தர்ப்பத்திலேயே திறக்கப்படுவதோடு அதற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்டியன் மேடு,**
**கொழும்பு 12.**

**தொலைபேசி இலக்கம் - 011-2321980/ 011-4849825/ 011-4849845**

# 1.விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை போக்குவரத்து சபை (இபோச)**

## இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 3720 எண்ணிக்கையான 295 / 80 R 22.5 புதிய ரேடியல் டியூப்லெஸ் டயர்களை வழங்கி விநியோகித்தல

**SLTB/TS/GEN/07/2024**

1. தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக இலங்கை போக்குவரத்து சபைக்கு 3720 எண்ணிக்கையான 295/80R 22.5 புதிய ரேடியல் டியூப்லெஸ் டயர்களை வழங்கி விநியோகிப்பதற்காக 2024.06.25ஆம் திகதியன்று பி.ப 3.00 மணிவரையும் இபோச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.06.04ஆம் திகதியிலிருந்து 2024.06.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு - 05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|
| 30 நாள் கடன் அடிப்படையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 3720 எண்ணிக்கையான 295/80R 22.5 புதிய ரேடியல் டியூப்லெஸ் டயர்களை வழங்கி விநியோகித்தல் | 3.5 mn |

2. விலைமனுக்கள் 2024.05.03ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்தம் ஏற்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்கு விலைமனுக்கள் நிலையானதாக இருத்தல் வேண்டும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2024.10.25 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவரான்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப் பிணையும் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2024.06.13 மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு - 05, கிருள வீதி, 200, இ.போ.சபை, இ.போ.ச பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவுபெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குதல் விநியோகித்தல் என குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024.06.25 பி.ப. 3.00 இற்கு மூடப்படும் அத்துடன் பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ம் மாடி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்குப் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ம் மாடி, தெத்சிறிபாய கட்டம் II - பத்தரமுல்ல**

**விசாரணைகள்:** **செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011 7706111, 0771056204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457**

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## பன்னல எஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கு தேவையான Dust Bag பெற்றுக்கொள்வற்கான திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வெட் வரி இன்றி) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக | வங்கி / காப்புறுதி பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2024/32 | Dust Bag | 432 Nos | 2,000.00 | ரூ. 65,000.00 | ரூ 130,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.06.04 முதல் 2024.06.19ம் திகதிகளில் மு.ப. 8.30 முதல் பி.ப. 2.30 வரை இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்படி பெறுகைகளுக்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல் 2024.06.20 பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் நடைபெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

---

**மேல் மாகாணம்**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (WPPRDA)**

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிருமாணம், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## கூட்டிணைவு வருமான வரி அறிக்கைகளின் கணனியாக்கல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

| விலைமனு இல. | விளக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | விலைமனு பாதுகாப்பின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | ரொக்கப் பணத்தில் | வங்கி |
| PRDA/WP/ SRO/ 2024/22R | கூட்டிணைவு வருமான வரி அறிக்கைகளை கணனியாக்கல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான அழைத்தல் | 1000+SSCL 2.5%+ VAT 18% | 20,000.00 | 40,000.00 |

01. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் (உஇஆநா) (CGIR) கோவை செய்து வைப்பதற்காக மேல் மாகாண மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கான மதிப்பீடுகளை வருமான வரி கடப்பாட்டை கணனியாக்கம் செய்வதற்காக கூட்டிணைவு வருமான வரி உசாத்துணைச் சேவைகளை வழங்கும் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் அனுபவமுள்ள கம்பனிகளிடமிருந்து அழைத்தல்.

கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் இருக்கின்றன.

**தெரிவு செய்யப்பட்ட வரி உசாத்துணையாளர் பின்வரும் பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.**

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு வருடங்களுக்கான கூட்டிணைவு வருமான வரி கடப்பாட்டை மதிப்பீடு/கணனியாக்கம் செய்தல்.
2. உஇஆநா இனால் தேவைப்படுத்தலுக்கமைவாக அதே காலப்பகுதிகளில் தேவைப்படுத்தப்படும் கணக்கீடு செய்தல் மற்றும் விளக்க அட்டவணைகளுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருடன் வருமான வரி அறிக்கைகளை கோவை செய்தல்.
3. மேற்குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு வருடங்களுக்காக கோவை செய்யப்பட்டுள்ள வருமான வரிகளின் அறிக்கைகளை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் அழைப்புக்களுக்கு பிரதிநிதித்துவத்தை மேற்கொள்ளல்.
4. 2024.06.04 ஆம் திகதியிலிருந்து 2024.06.18 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள கேள்விப் படிவ கட்டணத்தைச் செலுத்திய பின்னர், இந்த அதிகாரசபையின் பெறுகைப் பிரிவிலிருந்து இதற்கான கேள்வி ஆவணங்களின் தொகுதிகளை பெற்றுக் கொள்ளலாம். விலைக்கோரல் பாதுகாப்பு பெறுமதியானது மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்காக ஒன்றில் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக வங்கி உத்தரவாதமொன்றின் மூலமாக செலுத்தப்படல் வேண்டும்.
5. மேற்குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு வருடங்களுக்கான உங்கள் கேள்விக் கோரல்களை தனித்தனியாக தயவு செய்து சமர்ப்பிக்கவும். விலைமனுக்கோரல்கள் 2024.06.19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படுவதுடன் முகவரொருவர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
6. விலைமனுக்கோரல்கள் தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்), இல. 59, புனித செபஸ்தியார் மேடு, கொழும்பு-12 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் (011-2321980).

**தலைவர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்),**
**இல.: 59, புனித செபஸ்தியார் மேடு,**
**கொழும்பு -12.**
**(011-2321980).**

---

# வெற்றிடங்களுக்கான விளம்பரம்

**பௌத்த, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

மத்திய கலாச்சார நிதியம்

பௌத்த, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள மத்திய கலாசார நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியான நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## வடிவமைப்பு பொறியாளர் பதவி (05 வெற்றிடங்கள்)

| | |
|---|---|
| ஊதிய அளவு | MA 2-2 ரூ. (30,310-10 x 300-7 x 350-4 x 600-20 x 710 - 52,360) (கே.எஸ். சுற்றறிக்கை இல. 2/2016) |
| வயது எல்லை | 18 வயதுக்கு குறையாது மற்றும் 35க்கு மிகாமல் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது. |

- **கல்வித் தகுதி மற்றும் அனுபவம்**

(அ) கல்விக்கான பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) தேர்வில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்

மற்றும்

III. ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து ஏனைய இரண்டு பாடங்களில் சிறப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தரம்) தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுத்தேர்வு தவிர) அறிவியல் பாடத்தில் சித்தியடைந்து, மூன்றாம் நிலைக் கல்விப் படிப்புகளைத் தொடர்வதற்குத் தேவையான அளவிலான சாதனைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தொழில்நுட்ப திறன்கள் / திறமைகள்
இலங்கை தொழிநுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப பாட சான்றிதழுடன் (NVQ - 05 நிலை - வடிவமைப்பாளர்) தொடர்புடைய துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத பதவி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

- **பணியமர்த்தல் முறை**
போட்டித் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம்

- **நியமனத்தின் தன்மை**
நிரந்தர, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர்களின் அறக்கட்டளை நிதிகளுக்கு உரிமை உண்டு

## தொழில்நுட்ப உதவியாளர் பதவி (07 வெற்றிடங்கள்)

| | |
|---|---|
| ஊதிய அளவு | MA 2-2 ரூ. (30,310-10 x 300-7 x 350-4 x 600-20 x 710 - 52,360) (கே.எஸ். சுற்றறிக்கை இல. 2/2016) |
| வயது எல்லை | 18 வயதுக்கு குறையாது மற்றும் 35க்கு மிகாமல் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது. |

- **கல்வித் தகுதி மற்றும் அனுபவம்**

(அ) கல்விக்கான பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) தேர்வில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்

மற்றும்

III. ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து ஏனைய இரண்டு பாடங்களில் சிறப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தரம்) தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுத்தேர்வு தவிர) அறிவியல் பாடத்தில் சித்தியடைந்து, மூன்றாம் நிலைக் கல்விப் படிப்புகளைத் தொடர்வதற்குத் தேவையான அளவிலான சாதனைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தொழில்நுட்ப திறன்கள் ∴ திறமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) சான்றிதழை (ரேஞு - 05 மட்டத்திற்கு கீழே இல்லை) பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை தொழிநுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப பாட சான்றிதழுடன் (ரேஞு - 05 நிலை -வடிவமைப்பாளர்) தொடர்புடைய துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத பதவி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

- **பணியமர்த்தல் முறை**

போட்டித் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம்

- **நியமனத்தின் தன்மை**

நிரந்தர, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர்களின் அறக்கட்டளை நிதிகளுக்கு உரிமை உண்டு

## தொழில்நுட்ப உதவியாளர் பதவி (07 வெற்றிடங்கள்)

| | |
|---|---|
| ஊதிய அளவு | MA 2-2 ரூ. (30,310-10 x 300-7 x 350-4 x 600-20 x 710 - 52,360) (கே.எஸ். சுற்றறிக்கை இல. 2/2016) |
| வயது எல்லை | 18 வயதுக்கு குறையாது மற்றும் 35க்கு மிகாமல் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது. |

- **கல்வித் தகுதி மற்றும் அனுபவம்**

(அ) கல்விக்கான பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) தேர்வில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்

மற்றும்

III. ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து ஏனைய இரண்டு பாடங்களில் சிறப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தரம்) தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுத்தேர்வு தவிர) அறிவியல் பாடத்தில் சித்தியடைந்து, மூன்றாம் நிலைக் கல்விப் படிப்புகளைத் தொடர்வதற்குத் தேவையான அளவிலான சாதனைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தொழில்நுட்ப திறன்கள் / திறமைகள்

இலங்கை தொழிநுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப (NVQ - தரம் 05) சான்றிதழுடன் (அளவு சர்வேயர்) தொடர்புடைய துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத பதவி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

- **பணியமர்த்தல் முறை**

போட்டித் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம்

- **நியமனத்தின் தன்மை**

நிரந்தர, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர்களின் அறக்கட்டளை நிதிகளுக்கு உரிமை உண்டு

## பொதுவான தகுதிகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும்,

(அ) இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்

(ஆ) பதவி மற்றும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்காக சேவை செய்வதற்கு உடல் மற்றும் மன உறுதியுடன் இருக்க வேண்டும்.

(இ) சிறந்த குணம் கொண்டவராக இருக்க வேண்டும்.

**மற்றவை**

அரசு, மாநில நிறுவனங்கள் அல்லது சட்டப்பூர்வ வாரியங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள், பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், வழக்கமான பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று தங்கள் நிறுவனங்களின் தலைவர்களின் ஒப்பந்தம் அடங்கிய கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். (விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதிக்குள் அனைத்து தகுதிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.)

இதில் கலந்துகொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் www.ccf.gov.lk/notices என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்த விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, தங்களின் தகுதிகளை நிரூபிக்க சமர்ப்பித்த ஆவணங்களின் நகல்களை 2024.06.18 க்கு முன்பாக "பணிப்பாளர் நாயகம், மத்திய கலாச்சார நிதியம், 212/1, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். கடிவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை சரியாக குறிப்பிடப்பட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய கலாச்சார நிதியம்**
**212.∴1, பௌதலோக மாவத்தை**
**கொழும்பு 07.**

Daily News Classifieds, the Housewives' companion

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adZ Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adZ it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# தாயின் மரணத்தால் நாடு திரும்பும் சனத்



தனது தாயின் மரணத்தை அடுத்து இலங்கை அணியின் ஆலோசகராக அணியுடன் அமெரிக்க சென்ற முன்னாள் அணித் தலைவர் சனத் ஜயசூரிய இன்று (04) நாடு திரும்பவுள்ளார்.

ஜயசூரியவின் தாயாரான பிரீடா ஜயசூரிய 80 வயதில் காலமானார். சுகவீனமுற்றிருந்த அவர் மாத்தறையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்துள்ளார். அவரது இறுதிக் கிரியை நாளை (05) நடைபெறவுள்ளது.

இந்த செய்தியை கேட்டதை அடுத்து ஜயசூரிய நாடு திரும்புவதை இலங்கை கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. இலங்கை அணி நேற்று டி20 உலகக் கிண்ணத்தின் முதல் போட்டியில் தென்னாபிரிக்காவை எதிர்கொண்ட நிலையிலேயே ஜயசூரிய இலங்கையை நோக்கி திரும்பியுள்ளார்.

1996 இல் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு முக்கிய பங்கு வகித்த ஜயசூரிய கடந்த ஆண்டு இறுதியில் இலங்கை அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண போட்டிகளுக்காக பொலிஸ் ஸ்னைப்பர்கள் பாதுகாப்பு

## மைதானத்திற்குள் நுழையும் ரசிகர்களுக்கும் கெடுபிடி



இலங்கை அணி நேற்று (03) தென்னாபிரிக்காவுக்கு எதிரான தனது முதல் போட்டியில் ஆடிய நியூயோர்க்கில் உள்ள தற்காலிக மைதானத்தில் பொலிஸ் ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகள் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

34,000 பேர் அமரக்கூடிய ஐசன்ஹோவர் பார்க் மைதானத்தில் நடைபெறும் முதல் உலகக் கிண்ணப் போட்டியாகவே நேற்றைய ஆட்டம் இருந்தது. இங்கு நடைபெறும் போட்டிகளையொட்டி ஜூன் 3 தொடக்கம் 12 ஆம் திகதி வரை பாரிய அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாசாவ் கௌன்டி பொலிஸ் திணைக்களம் முன்னேடுத்துள்ளது.

இந்த மைதானத்திலேயே எதிர்வரும் 9ஆம் திகதி தொடரின் முக்கிய போட்டிகளில் ஒன்றான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டமும் நடைபெறவுள்ளது.

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) ஆதரவுக் குழு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் ஸ்கைப்பர் துப்பாக்கிதாரிகள் உட்பட அமெரிக்க சிறப்பு ஆயுதங்கள் மற்றும் மூலோபாய குழு உலகக் கிண்ண தொடருக்கான பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளது. மைதானத்திற்குள் சிவில் உடையிலான பொலிஸ் அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

'போட்டியில் பங்கேற்றிருக்கும் அனைவரதும் பாதுகாப்பே எமக்கு முதன்மையாக உள்ளது. மேலும் எங்களிடம் விரிவான மற்றும் வலுவான பாதுகாப்புத் திட்டம் உள்ளது' என்று சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் மொத்தம் எட்டு உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறுவதோடு ஆளில்லா விமானத் தாக்குதல் ஒன்றுக்கான அச்சுறுத்தல் இருப்பதால் அந்த நாட்களில் மைதானத்தை சூழவிருக்கு பூங்க நிலப்பகுதி மூடப்பட்டுள்ளது.

போட்டியை பார்வையிட வரும் ரசிகர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதோடு விமான நிலையங்களில் இருப்பது போன்று ஸ்கிரீன் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த நியூயோர்க் அரங்கு 30 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டபோதும் போட்டிகள் முடிந்த பின் அகற்றப்பட்டு நாசாவ் கௌண்டி நிர்வாகத்திடமே திரும்ப அளிக்கப்படவுள்ளது.

# சுப்பர் ஓவரில் நமீபிய அணி பரபரப்பு வெற்றி



டி20 உலகக் கிண்ணத்தில் ஓமானுக்கு எதிரான பி குழுவுக்கான போட்டியில் நமீபிய அணி சுப்பர் ஓவரில் பரபரப்பு வெற்றியை பெற்றது.

பிரிட்ஜ்டவுனில் இலங்கை நேரப்படி நேற்று (03) காலை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஓமான் அணி 19.4 ஓவர்களில் 109 ஓட்டங்களுக்கு சுருண்டது. ருபன் ட்ரம்பிள்மன் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய நமீபிய அணி வேகமாக ஓட்டங்களை குவிக்க தடுமாறியதால் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 109 ஓட்டங்களையே பெற போட்டி சமநிலை அடைந்தது.

இதனால் முடிவை தீர்மானிப்பதற்கு சுப்பர் ஓவர் முறை பயன்படுத்தப்பட்ட நிலையில் அந்த ஓவரில் நமீபியா 21 ஓட்டங்களை விளாச பதிலெடுத்தாடிய ஓமான் ஒரு விக்கெட்டை இழந்து 10 ஓட்டங்களையே பெற்றது.

முன்னதாக நேற்றுமுன்தினம் நடந்த சி குழுவுக்கான பப்புவா நியு கினிக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

# சம்பியனானது எஸ்.எஸ்.சி.

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



ரிதம் தொலைக்காட்சியின் நான்கு வருட நிறைவையொட்டி இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்மாந்துறை எஸ்.எஸ்.சீ. விளையாட்டு கழகம் சம்பியன் பட்டம் வென்றது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்ட இந்தத் தொடரின் இறுதிப்போட்டி அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் சம்மாந்துறை யுனிட் அணியை எதிர்கொண்ட எஸ்.எஸ்.சீ. 7 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

# சர்வதேச செய்திகள்

# காசாவில் போர் நிறுத்தத்திற்கான எதிர்பார்ப்புக்கு மத்தியிலும் இஸ்ரேல் தொடர்ந்தும் கடும் தாக்குதல்

## அமெரிக்கா அழுத்தம்: இஸ்ரேலில் அரசியல் குழப்பம்



காசாவில் ஆரம்பக்கட்டமாக ஆறு வார போர் நிறுதத்தை ஏற்படுத்தும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்த போர் நிறுத்த உடன்படிக்கையை இஸ்ரேல் ஏற்கும் என அமெரிக்கா எதிர்பார்ப்பை வெளியிட்டிருப்பதோடு ஹமாஸ் அமைப்பு இந்தத் திட்டத்திற்கு சாதகமாக பதிலளித்துள்ளது.

எனினும் காசாவில் தொடர்ந்தும் மோதல் நீடிப்பதோடு இஸ்ரேலிய உக்கிர தாக்குதல்களில் நேற்றும் பலர் கொல்லப்பட்டனர்.

பைடன் கடந்த வாரம் வெளியிட்ட மூன்று கட்டங்களைக் கொண்ட போர் நிறுத்த திட்டத்தில், கைதிகள் பரிமாற்றத்தில் பணயக்கைதிகள் மற்றும் இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டு, காசாவில் மனிதாபிமான உதவிகள் அதிகரிக்கப்படவிருப்பதோடு, இறுதியில் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஏ.பி.சி. தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கௌன்ஸில் பேச்சாளர் ஜோன் கிர்பி கூறியதாவது, 'ஹமாஸ் ஏற்றுக்கொண்டால் முன்மொழியப்பட்டிருக்கும் இந்த போர் நிறுத்த உடன்படிக்கைக்கு இஸ்ரேல் விருப்பத்தை வெளியிடும் என்று அமெரிக்கா மிக எதிர்பார்ப்புடன் உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

'ஹமாஸின் உத்தியோகபூர்வ பதிலுக்காக நாம் காத்திருக்கிறோம்' என்று குறிப்பிட்ட அவர், இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு இரு தரப்பும் கூடிய விரைவில் இணக்கம் தெரிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஆறு வாரங்கள் கொண்ட ஆரம்பக் கட்ட போர் நிறுத்தத்தின்போது, இரு தரப்பினரும் இரண்டாம் கட்டம் எவ்வாறு அமையும் மற்றும் எப்போது ஆரம்பிப்பது என்பது பற்றி அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று கிர்பி சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் கடந்த ஞாயிறன்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் மற்றும் போர்க் கால அமைச்சரவை உறுப்பினர் பென்னி கான்ட் உடன் இந்த உடன்படிக்கை பற்றி தொலைபேசியில் தனித்தனியாக பேசினார்.

இந்நிலையில் இந்த போர் நிறுத்த திட்டத்தை இஸ்ரேல் ஏற்பதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் உதவியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனின் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு பேட்டி அளித்த நெதன்யாகுவின் தலைமை வெளியுறவு கொள்கை ஆலோசகர் ஒபிர் பொக், 'பைடன் முன்மொழிந்த ஒப்பந்தத்திற்கு நாம் இணங்கி இருக்கிறோம், ஆனால் இது ஒரு நல்ல ஒப்பந்தமல்ல. எவ்வாறாயினும் பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்' என்று தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த உடன்படிக்கைக்கு நெதன்யாகு இணங்கினால் அரசை கலைப்பதாக நெதன்யாகுவின் கூட்டணி அரசில் உள்ள தீவிர வலது சாரி அமைச்சர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் இஸ்ரேலிய அமைச்சரவையில் இருந்து முரண்பாடான செய்திகள் வருவதாக செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த திட்டம் குறித்து எந்த ஒரு எழுத்துமூல ஆவணமும் இன்னும் கிடைக்கவில்லை என்று ஹமாஸ் பேச்சாளர் ஒசாமா ஹம்தான், அல் ஜசீரா தொலைக்காட்சியிடம் கடந்த ஞாயிறன்று குறிப்பிட்டிருந்தார்.

மறுபுறம் காசாவில் ஹமாஸின் ஆட்சியை இஸ்ரேல் ஏற்காது என்றும் மாற்று திட்டங்கள் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிவிப்பு அமெரிக்காவின் போர் நிறுத்தத் திட்டத்தை குழப்புவதாக உள்ளது.

'முக்கியமான இராணுவ நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கும் அதே நேரம், ஹமாஸுக்கு மாற்றான ஆட்சி ஒன்றை மதிப்பீடு செய்து வருகிறோம்' என்று பாதுகாப்பு அமைச்சர் கல்லன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த முயற்சிகளுக்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல்களில் காசாவெங்கும் 21 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இதில் தெற்கு காசா நகரின் டால் அல் ஹவா மற்றும் செய்தூன் பகுதிகளில் இடம்பெற்ற பீரங்கி தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். சப்ரா பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற குண்டு வீச்சில் நால்வர் கொல்லப்பட்டதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாவில் சிசு ஒன்று உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

இதேநேரம் தெற்கு நகரங்களான கான் யூனிஸ் மற்றும் ரபாவில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேலிய படை நேற்று முன்தினம் இரவு நடத்திய சரமாரித் தாக்குதல்களில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிழக்கு கான் யூனிஸில் இரு வீடுகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக வபா செய்தி நிறுவனம் கூறியது.

அபூ கத்தர் குடும்பத்திற்கு சொந்தமான மற்றொரு வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு பலரும் காயமடைந்துள்ளனர்.

கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 36,500 நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இஸ்ரேலின் படை நடவடிக்கை தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தொட்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் பலஸ்தீன அகதிகள் நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாகவே ரபா நகர் இருந்து வந்தது. எனினும் அந்த நகர் மீது இஸ்ரேலியப் படை கடந்த மே தொடக்கத்தில் படை நடவடிக்கையை ஆரம்பித்த நிலையில் மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வெளியேறிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கான் யூனிஸ் நகரின் இடிபாடுகள் மற்றும் அழிக்கப்பட்ட கட்டடங்களில் தற்போது அடைக்கலம் பெற்றிருப்பதாக அந்த ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# இஸ்ரேலியருக்கு மாலைதீவு தடை



சுற்றுலா பயணிகளை கவர்ந்த நாடான மாலைதீவு, இஸ்ரேலியர்களுக்கு தடை விதித்துள்ளது. பலஸ்தீனர்களுக்கு ஆதரவை அளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி முஹமது முயிசு தெரிவித்துள்ளார்.

"பலஸ்தீனத்திற்கான மாலைதீவின் ஒருமைப்பாட்டுக்கு" அழைப்பு விடுக்கும் தேசிய நிதி திரட்டும் பிரசாரம் ஒன்றின் போதே ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் சுமார் 11,000 இஸ்ரேலியர்கள் மாலைதீவுக்கு பயணித்திருப்பதோடு அது அந்த நாட்டின் மொத்த சுற்றுலா பயணிகளின் வருகையில் 0.6 வீதமாகும். எனினும்; இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் 528 இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளே அங்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில் காசா போருக்கு எதிரான கைச்சாத்து வேட்டையில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சியினர் மற்றும் ஆளும் கூட்டணி கட்சிகள் இஸ்ரேலியர்களுக்கு தடை விதிக்கும்படி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தனர்.

மாலைதீவு இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளுக்கான முந்தைய தடையை 1990களின் ஆரம்பத்தில் விலக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மெக்சிகோவில் முதலாவது பெண் ஜனாதிபதி தேர்வு



மெக்சிகோவின் முதல் பெண் ஜனாதிபதியாக கிளோடியா ஷெயின்பவும் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக ஆரம்பக் கட்ட தேர்தல் முடிவுகளில் தெரியவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மெக்சிகோ நகர முன்னாள் மேயரான 61 வயது கிளோடியா 56 வீத வாக்குகளை வென்று தனது பிரதான போட்டியாளரான பெண் தொழிலதிபரான சொசிட் கல்வேஸை தோற்கடித்துள்ளார்.

இந்த ஆரம்பக்கட்ட முடிவு உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது வழிகாட்டியாக உள்ள பதவியில் இருக்கும் அன்ட்ரெஸ் மனுவேல் லோபசுக்கு பதில் எதிர்வரும் ஒக்டோபர் 1 ஆம் திகதி புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார். லோபஸின் பணிகளை தொடரப்போவதாக கிளோடியா தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ அரசியலமைப்பின்படி ஆறாண்டு காலம் கொண்ட ஒரு தவணைக்கு மாத்திரமே ஒருவர் ஜனாதிபதி பதவியை வகிக்க முடியும் என்ற நிலையில் 2018 தொடக்கம் பதவியில் இருக்கும் ஜனாதிபதி லோபசுக்கு இரண்டாவது தவணைக்கு போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்வானைச் சூழ சீனாவின் செயற்பாடுகள் அதிகரிப்பு



தாய்வானைச் சூழவுள்ள கடல் மற்றும் ஆகாயப் பிராந்தியங்களில் சீன படையினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ள போதிலும் எமது இறையாண்மையையும் ஜனநாயக விழுமியங்களையும் பாதுகாப்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்று தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை சீனா, தமது இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் ஏவுகணைப் படையினர் கூட்டு படைப் பயிற்சியை தென் பகுதியில் நடாத்தியதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், தாய்வானுக்கு உட்பட்ட ஆகாய மற்றும் கடற்பரப்புக்களில் சீனா இரண்டு நாட்கள் கூட்டு படை பயிற்சியை மேற்கொண்டது. தாய்வான் நீரிணைப் பகுதியில் பதற்றங்கள் அதிகரித்துவரும் சூழலில் இடம்பெற்றுள்ள இப்படை நடவடிக்கை தாய்வானின் இறையாண்மைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.